


# பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 118
இதழ்: 27


25—12—1992
விலை ரூபா 7-00

கிறிஸ்மஸ் சிறப்பு மலர்


22-12-1992

## வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார்.

# அகதி முகாமில் ஆண்டவன் பிறக்கின்றார்



அகதி முகாமில் ஆண்டவன் பிறக்கிறார்
ஆங்கு சில தினம் வாழ விழைகிறார்
சகதி வாழ்வினில் சந்திக்கும் துயரினைப்
பகிர்ந்து கொள்ளவாம் பரமன் வருகிறார்

மாட்டுத் தொழுவினை மறந்து இம்முறை
மக்கள் தொழுவினில் மன்னன் பிறக்கிறார்
ஏற்றத் தாழ்வுகள் கொண்ட மனிதனை
"இறங்கி வா!" என இறைவன் சொல்கிறார்!

தூதர் பாட்டினில் தூங்கி மகிழ்ந்தவர்
துயரப் பாட்டினில் தூக்கம் கலைகிறார்
மேதையானவர் மேன்மையானவர்
தாழ்மையாகவே வந்து பிறக்கிறார்,

வீதி எங்கணும் நாதி இல்லாதவர்
விம்மி அழுங்குரல் விமலன் கேட்கிறார்
பாதையோரத்தில் படுக்கும் அகதியைப்
பார்த்து ஆறுதல் சொல்ல வருகிறார்.

கையிழந்தவர் காலிழந்தவர் பொருள் இழந்தவர்
தொழில் இழந்தவர்
மெய்யுருகவே சொல்லும் கதைகளால்
மெத்தவும் மனம் நொந்தழுகிறார்

நாடு எங்கணும் போரின் தாண்டவம்
ஆடும் இந்நிலைக் கார் பொறுப்பெனப்
போடு போட்டொரு கேள்வி கேட்கிறார்
நாணியே தலை குனிய வைக்கிறார்.

மோதும் போரிலே அழியும் இந்நிலை
போதும் விரைவிலே தீர்வு என்றவர்
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
ஈதுணர்ந்து நீர் வாழும் என்கிறார்.

● நவாலியூர் நாயகி

## யாழ். ஆயரின் அருளுரை

# சுயநலங்கள் சுரண்டல்களை விடுத்து மனித மாண்பினை மதித்து பிறர் அன்பு வாழ்க்கை நடாத்துவோமாக!



வடக்கு—கிழக்கில் வாழும் எமது மக்கள் இன்று பல்வேறு இன்னல்கள் மத்தியில் தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். காலங் காலமாக வாழ்ந்து வந்த இல்லிடங்களையும், பாவனைப் பொருள்களையும் இழந்து, தமது அருமை பெருமையானவர்களை முதலாகப்பறிகொடுத்து நலிகின்றனர். எத்தனையோ இளைஞர்கள் கல்வி, தொழில் வாய்ப்பு இன்றி எதிர்காலத்தைப் பற்றி விரக்தியடைந்து நிற்கின்றனர், வன்செயல்களின் இடையிலும், தொடர்ந்து நடைபெறும் இராணுவத் தாக்குதல் மத்தியிலும் எப்போதும் பயந்து ஒதுங்கி வாழ வேண்டியுள்ளது.

இவற்றிடையே மீண்டும் ஒருமுறை கிறிஸ்துவின் பிறப்பு விழாவைக் கொண்டாடுகிறோம். இத்தருணத்தில் தம்மைச் சூழ இருக்கும் இன்னல்களைக் கண்டும் காணாமல் சிலர் தமது வசதிகளைக் கவனிப்பதிலேயே ஆழ்ந்துள்ளனர். வேறு சிலர் இறை நம்பிக்கையற்றவர்களாக உலகமே சதம், மனிதனே எல்லாம் என்ற விதமாக வாழ்கின்றனர். வலோற்காரத்தினாலும், வன்செயல்களினாலும் அமைதி கிடைக்கும் என்று நம்பிக்கை கொள்கின்றனர்.

"இறைவனின் அன்பும் தயவும் எம்மத்தியில் தோன்றியுள்ளது!" என்று புனித சின்னப்பர் கிறீஸ்துவின் பிறப்பைப் பற்றிக் கூறுகின்றார். எம்மைப் பீடித்திருக்கும் சுயநலங்கள், சுரண்டல்கள் போன்ற உலகப்பற்றுகளை விட்டு, மனித மாண்பினை மதித்து, பிறர் அன்பு போற்றும் வாழ்க்கை நடாத்தத் தொடங்குகின்ற பொழுது கிறீஸ்து தமது பிறப்பால் கொண்டு வந்த சமாதானம் நமது உள்ளங்களிலும், இல்லங்களிலும், சமூகத்திலும், நாட்டிலும் தோன்றும். இதுவே எமது எதிர்பார்ப்புகளுக்கு நம்பிக்கை தரும் ஒளியாக அமையும். கிறீஸ்துவின் பிறப்பு இந்நம்பிக்கையை எம்மில் அதிகரிக்க ஆசிக்கின்றோம்.

பாதுகாவலனின் வாசக அன்பர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆசிரியர் குழுவுக்கும், பல சிரமங்கள் மத்தியில் பாதுகாவலனை வெளியிடத் துணைபுரியும் அனைவருக்கும் எமது இனிய நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

\+ தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்.

## திருத்தந்தையின்

# 1993-அமைதித் தினச் செய்தி



26ஆவது உலக கத்தோலிக்க அமைதித்தினம் 1993

ஜனவரி முதல் நாளன்று அனுசரிக்கப்படுகின்றது. இவ் அமைதித்தினத்திற்கென திருத்தந்தை வெளியிட்டுள்ள செய்தியில் உலக அமைதிக்குப் பெரும் அச்சுறுத்தலாய் இருக்கும் ஏழ்மை குறித்து மானுடத்தின் மனச்சான்று மறக்கக் கூடாது என்பதை வலியுறுத்தியுள்ளார். ஆசியா, ஆபிரிக்கா லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களின் சில நாடுகளின் வறுமையைப் பற்றிக் கோடிட்டுக் காட்டிய பாப்பிறை மிக ஏழ்மையான நாடுகளின் வளர்ச்சிக்காக அவர்களுக்கு உதவி செய்வது வளர்ந்த நாடுகளுக்குள்ள தெளிவான கடமையைக் காட்டுகின்றது என்று கூறியுள்ளார்.

போரினால் எப் பிரச்சனையையும் தீர்க்க முடியாது என்பதால் அமைதிக்கான உலகின் முயற்சிகளை ஊக்குவித்துள்ள பாப்பிறை, ஏழ்மை உலகில் அமைதிக்கான ஊற்று என்பதை நற்செய்தியின் அடிப்படையில் விளக்கியுள்ளார்.

## காவலன் வாழ்த்து

காகிதத் தட்டுப்பாடு, அச்சுப்பொருள்களின் விலை உயர்வு, இதர செலவுகளின் ஏற்றம் — இவற்றிற்கிடையே எம் வாரஇதழ் வெளிவருகின்றது. காலாகாலமாக காவலனை ஆதரித்து வரும் அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், நத்தார் — புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் கூறுகின்றோம்!

# எம்கருத்து

## "உலகில் நல் மனத்தோர்க்கு சமாதானம்"

ஆழ்ந்த பொருளுடைய சிந்தனையைத் தூண்டுவதாகிய, சக்தி நிறைந்த, பயனுடைய வாக்கியம் இது! உலகில் அமைதியும் மகிழ்ச்சியும், இன்பமும் தரும் பொருள்கள் கோடிக்கணக்கில் இருந்தும், ''நன் மனத்தோர்க்கு மகிழ்ச்சி''யென்ற ஒரே வார்த்தையில் அனைத்தையும் அடக்கிவிட்ட சிறு வாக்கியமிது.

உலகில் நடக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் — முன்னேற்றங்களுக்கும், குழப்பங்களுக்கும் — கொடுமைகளுக்கும், அழிவுகளுக்கும் — அனர்த்தங்களுக்கும் ... .. மனம்தான் காரணம்.

மனம் தான் உலகை ஆள்கின்றது, அளக்கின்றது, அழிக்கின்றது, காக்கின்றது. மனம் நல்லதானால் உலகம் மகிழ்ச்சியான இன்பம் நிறைந்த வாழிடமாக அமையும்.

உள்ளம் உடையும்போது உலகம் கசக்கின்றது, வாழ்க்கை வெறுக்கின்றது பற்றின்மை தோன்றுகின்றது.

மனித மனம் இலகுவில் சஞ்சலப்படுவது, சலிப்படைவது, அடக்கமுடியாதது. நன்மை - தீமை, விருப்பு - வெறுப்பு, இன்ப - துன்பம், உயர்வு-தாழ்வு, இருள் — ஒளி, நேர்மை — வஞ்சகம் அனைத்துக்கும், ஒற்றுமை - வேற்றுமை கற்பிப்பது மனம். மனமே நம்மை வழிநடத்துகிறது, அழவும் மகிழவும் செய்கிறது; வாழ்வுக்கும் தாழ்வுக்கும் வழிகோலுகிறது; கொடியவனாக்குவதும் ஞானியாக்குவதும் அதுவே.

இத்தகைய மனம்தான் இறைவன் வாழும் ஆலயமாகவும் இருக்கிறதென்பதை எண்ணிப் பார்க்கும் போது வியப்புத்தான் வருகிறது! எனினும் மற்றுமோர் உண்மையை மறுக்கமுடியாது. எங்கள் உள்ளம் உண்மைத் தெய்வத்திடமிருந்து வெகுதூரம் விலகி நிற்கின்றது. நீதியினதும் உண்மையினதும், அன்பினதும் ஊற்றாகிய இறைவனை மறந்து வாழ்கின்றது. இதுவே உலகில் நிலவும் அமைதியின்மைக்கு மூல காரணம்.

அமைதி வேண்டுமாயின் இறைவன் உள்ளங்களில் உறையவேண்டும். இறைபற்றுடன் இயங்கும் உறுதியுள்ள உள்ளம் படைத்தவர்கள் வேண்டும். அவர்களின் மனம் ஒரு நிலையுடையதாக இருக்கவேண்டும். அங்கும் இங்கும் அலையாது நேரிய வழியை நோக்கிச் செல்லவேண்டும்.

நன்மையைச் சாரவும், தீமையை விலக்கவும் திடமனது தேவை. நல்லதைத் தேர்ந்தெடுப்பதோடு நல்லதைச் சார்ந்திருக்கவும் வேண்டும். தீமை என்று தெரிந்த பிறகும் அதைப் பழக்க நாட்டம் காரணமாக விட்டுவிடாதிருப்பது மன அமைதியைக் குலைத்துவிடும்.

அமைதியுடன் வாழ, தெய்வத்தன்மையுடன் குழந்தை வடிவில் வந்த ஆண்டவன் நம் உள்ளத்திலும் குடிகொள்ளவேண்டும். அந்த தெய்வீக குழந்தைதான் மனக்கவலை, குழப்பத்திற்கு மாற்று மருந்து. இருள் வழி செல்லும் குருட்டு நெஞ்சுக்கு வழித்துணையான ஒளிவிளக்கு! அத்தெய்வீக குழந்தையின் பிறப்பைக் கொண்டாடும் நாம் அதன் அறிவு, அழகு, அன்பு, தெய்வீகத்தை தியானித்து, நம் உள்ளத்தை அமைதிபெறச் செய்வோம்.

உலகத்திலேயே அவருக்கு இடமில்லாமல் செய்ய, அவரை அழிக்க முற்படும் உள்ளத்தில் வஞ்சமெனும் நஞ்சு நிறைந்த கயவர்கள்போல் அல்லாது, அவரின் பிறப்பை அறிந்து இறைவனைத் தேடும் உள்ளம் கொண்ட ஞானிகள்போல் எங்கள் இதயத்தில் அமைதியின் அரசனுக்கு இடமளிப்போமாக!

# புரியாத புதிர்களா?

அதிகாரம் 3

## திருமறை நூலின் இறை ஏவுதலும் அதன் பொருள் விளக்கமும்

11. திருமறைநூலில் அடங்கியுள்ளவையும் அதில் வெளிப்படுபவையுமான இறை வெளிப்பாட்டு உண்மைகள் தூய ஆவியின் தூண்டுதலினால் எழுதப்பட்டவையாகும். பழைய, புதிய ஏற்பாட்டு நூல்கள் யாவும், அவற்றின் எல்லாப் பாகங்களும் தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டுள்ளமையாலும் (காண். அரு. 20:31; 2 திமோ. 3:16, 2 இரா. 1:19–21; 3:15–16) இறைவனையே தங்கள் ஆசிரியராகக் கொண்டுள்ளமையாலும் அவை அப்படியே தனக்கு வழிவழியாக வந்துள்ளமையாலும் புனித தாயாம் திருச்சபை, அப்போஸ்தலர்களின் விசுவாசத்தைப் பின்பற்றி அவற்றைப் புனிதமானவையாகவும், திருமுறையைச் சார்ந்தவையாகவும் ஏற்றுக்கொள்கின்றது. இத்திருமறை நூல்களை உருவாக்க இறைவன் மனிதர்களைத் தேர்ந்து கொண்டார். இறைவனே அவர்களில், அவர்கள் வழியே செயலாற்ற அவர்கள் தங்கள் திறமையையும் வலிமையையும், பயன்படுத்தி அவர் விரும்பிய எல்லாவற்றையும், அவற்றை மட்டுமே உண்மையான ஆசிரியர்கள் என்ற முறையில் எழுத்தில் வடிக்குமாறு அவர்களைப் பயன்படுத்தினார்.

ஆகவே இறைவனால் ஏவப்பட்ட ஆசிரியர்கள் அல்லது திரு எழுத்தாளர்கள் உறுதியாய்க் கூறும் யாவும் தூய ஆவியால் உறுதியாய்க் கூறப்படுவதாகக் கொள்ளவேண்டும். இதன் காரணமாக, நமது மீட்பிற்காக இறைவன் இப்புனித நூல்களில் அடக்க விரும்பிய உண்மையையே திருமறை நூல்கள் நமக்கு உறுதியுடனும், உண்மையுடனும், தவறின்றியும் போதிக்கின்றன என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆகையால், ''மறைநூலில் உள்ளதெல்லாம் கடவுளால் ஏவப்பட்டுள்ளது. போதிக்கவும் கண்டிக்கவும் சீர்திருத்தவும், இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வில் மக்களைப் பயிற்றவும் பயன்படும். இவ்வாறு கடவுளின் அடியான், திறமை நிரம்பப் பெற்று, எல்லாவகையான நற்செயல்களையும் செய்யத் தகுதியுள்ளவனாகின்றான்'' (2 தீமோ. 3:16–17 கிரேக்க மூலம்).

### திருமறை நூலுக்குப் பொருள் விளக்கம் தரும் முறை

12. இறைவன் திருமறை நூலில் மனிதரது வழக்கப்படி மனிதர் வழியாகப் பேசுகிறார். எனவே இறைவன் நமக்குக் கூற விரும்பியதை நன்கு உணரும்படியாகத் திரு ஆசிரியர்கள் உண்மையிலேயே உணர்த்த நினைத்ததையும், அவர்களின் சொற்களால் இறைவன் அறிவிக்க விரும்பியதையும் திருமறைநூல் பொருளுரையாளர் உன்னிப்பாக ஆராய வேண்டும்.

அடுத்த இதழில்
அதிகாரம் 4

திருஎழுத்தாளர்களின் நோக்கத்தைக் கண்டறிய மற்றவைகளோடு இலக்கிய அமைப்புக்களையும் கவனிக்க வேண்டும். ஏனெனில், உண்மையானது வரலாறு இறைவாக்கு, கவிதை அல்லது வேறு இலக்கிய அமைப்புக்களைக் கொண்ட பாடங்களில் வெவ்வேறு விதமாய் வெளியிடப்பட்டு விளக்கப்படுகிறது.

மேலும், தம் காலத்திற்கும் பண்பாட்டு நிலைமைக்கும் ஏற்ற வண்ணம் அக்கால வழக்கிலிருந்த இலக்கிய அமைப்புக்களை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் பயன்படுத்தியதன் மூலம் திரு ஆசிரியர் என்ன பொருளை வெளிப்படுத்த விரும்பினார், மற்றும் வெளிப்படுத்தினார் என்பதைப் பொருளுரையாளர் காணவேண்டும். திரு ஆசிரியர் எழுத்து வடிவில் உறுதியாய்க் கூற விரும்பியதை சரியாய்ப் புரிந்துகொள்ள அவர் காலத்தில் வழக்கிலிருந்த உணரும், பேசும், எடுத்துக் கூறும் இயல்பான முறைகளையும், அக்காலத்தில் மக்கள் ஒருவரோடொருவர் பழகும்போது பயன்படுத்திய முறைகளையும் கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

எந்த ஆவியானவரால் திருமறைநூல் எழுதப்பெற்றதோ, அதே ஆவியானவரின் துணைகொண்டு, அதை நாம் படிக்கவும் அதற்குப் பொருள் விளக்கம் செய்யவும் வேண்டும். எனவே திருமறைநூல் பாடங்களின் பொருளைச் சரிவரக் கண்டுணர்வதற்கு, அதன் உள்ளடக்கத்தையும் திருமறை நூல் முழுவதன் ஒற்றுமையையும் கூர்ந்து நோக்க வேண்டும்; அத்தோடுகூட திருச்சபை முழுவதன் உயிருள்ள மரபும், விசுவாச உண்மைகளுக்கிடையேயுள்ள ஒப்புமையும் கவனிக்கப்பட வேண்டும். இவ்விதிகளைப் பின்பற்றித் திருமறை நூலின் பொருளை ஆழ்ந்தறியவும் விளக்கவும் உழைப்பது திருமறை நூல் வல்லுநர்களின் கடமையாகும். இத்தகைய ஆராய்ச்சியின் வழியே திருச்சபையின் கருத்தும் முதிர்ச்சியடையும். ஏனெனில், திருமறைநூலைவிளக்கிப் பொருள் கூறும் வழிகளைப் பற்றிய இவை யாவும் இறைவார்த்தையைக் காத்து, பொருள் விளக்க வேண்டிய இறைக்கட்டளையையும் பணியையும் பெற்றுள்ள திருச்சபையின் தீர்ப்புக்குட்பட்டனவாகும்.

### இறைவனின் இரக்கப் பெருக்கம்

13. ''இறைவனின் சொல்லரிய அருளிரக்கத்தையும் அவர் நம்மீது பராமரிப்பும் அக்கறையும் கொண்டு தம் மொழியை எத்துணைக்குத் தழுவியமைத்தார் என்பதையும் உணரும் வகையில்'' திருமறைநூலில், அவரது உண்மையும் புனிதத்தன்மையும் பழுதின்றி இருக்க, காலங்கடந்த ஞானத்தின் வியத்தகு இரக்கம் கண்கூடாகிறது. காலங்கடந்த தந்தையின் வாக்கு ஆனவர் முற்காலத்தில் பலவீனம்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

# இயேசுவின் தலைமுறைப்பட்டியல்

*இஸ்ராயேல் மக்களின் வரலாற்றில் தலைமுறை பட்டியல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இது அவர்களின் குல, இன. சமுகங்களிலிருந்து தோன்றுகின்றது. இது ஒருவனுடைய கடமைகள், உரிமைகள் என்பவற்றை எடுத்துக்காட்டுகின்ற ஆதாரபூர்வமான சான்றாகக் கருதப்படுகின்றது. ஒருவன் தான் எந்த குலத்தை சார்ந்தவன் என்பதை தலைமுறைப்பட்டியல் வழியாக நிரூபிக்கும் போது அவனுக்கு அந்தக் குலத்தாருக்குரிய உரிமைகள், கடமைகள், சலுகைகள் என்பன கிடைக்கின்றன.*

*இக்கட்டுரை நற்செய்திகளில் காணப்படும் தலைமுறைப் பட்டியல்கள் பற்றியும், குறிப்பாக புனித. மத்தேயு நற்செய்தியில் உள்ள தலைமுறைப் பட்டியல் பற்றி, ஆய்வு செய்ய முற்படுகின்றது.*

புனித மத்தேயுவின் நற்செய்தியில் முதலாம் அதிகாரத்திலும், புனித. லூக்காஸ் நற்செய்தியில் மூன்றாம் அதிகாரத்தின் இறுதியிலும் தலைமுறைப் பட்டியல்கள் காணப்படுகின்றன. இவை இரண்டிற்குமிடையில் ஒற்றுமைகளை விட வேற்றுமைகளே அதிகம்.

புனித மத்தேயு தனது நற்செய்தியில் தலைமுறைப் பட்டியலை ஆபிரகாமிலிருந்து இயேசு வரை இறங்கு வரிசையில் தருகின்றார், அதேவேளையில் புனித லூக்காஸ் தமது நற்செய்தியில் தலைமுறைப் பட்டியலை இயேசுவிலிருந்து ஆதாம் வரை ஏறு வரிசையில் தருகின்றார். தமது நற்செய்திகளில் புனித மத்தேயு அரச குலத்தலைமுறையையும், புனித லூக்காஸ் குருகுல தலைமுறையையும் பின்பற்றுகின்றனர். இந்த இரு நற்செய்தியாளர்களும் யூத சட்டத்தின் முன்னர் இயேசு ''தாவீதின் வழி வந்தவர்'' ( Son of David ) என்று காட்ட விழைகின்றனர்.

இந்த தலைமுறைப்பட்டியல்களில் வரலாற்று நோக்கில் விபரங்கள் கொடுக்கப்படவில்லை என்பதையும் மாறாக, இறையியல் நோக்கில் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளனஎன்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இரண்டு நற்செய்தியாளர்களிடையிலும் இயேசுவின் தலைமுறைப் பட்டியல் சம்பந்தப்பட்ட முரண்பாடுகள் அவர்கள் தமது நற்செய்திகளை எழுதிய நோக்கங்களைக் கொண்டு நியாயப் படுத்தப்படுகின்றன. கிறிஸ்தவ மறையைத் தழுவிக் கொண்ட யூதர்களுக்கு தனது நற்செய்தியை எழுதிய புனித மத்தேயு தனது நற்செய்தியின் தொடக்கத்திலேயே ''இயேசுவே தாவீதின் குலத்துதித்த

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# ஈன்றவளின் பள்ளியில்

● சுவாமி ஜீவா போல்

கிறிஸ்து இயேசுவின்பிறப்பு நிகழ்ச்சியை முழுமையாகக் கண்டு களித்தவரில் முதலிடம் பெறுபவர் யார்? என சிந்தித்த போது மங்கள வார்த்தையிலிருந்து தூய ஆவியின் வருகை ஈறாக நிகழ்ச்சிகளை உன்னிப்பாக கூர்ந்து அவதானித்து, தியானித்து அவற்றை அனுபவித்த மரியாள்தான் என்பது வெள்ளிடை மலை.

மரியாள் கிறிஸ்து – பிறப்பு நிகழ்ச்சியை எப்படி அனுபவித்தாள் என்று படிப்படியாக எண்ணும் போது தான் பிறப்பு நிகழ்ச்சியின் உட்பொருளை ஆழமாகப் புரிந்து கொள்ள முடியும்.

இறைமகன் இயேசுவின் பிறப்பிற்காக அகில உலகம் முழுவதும் ஆவலோடு எதிர் பார்த்திருந்தது. ஆயினும் மரியாளின் கன்னிப் பருவத்தில் அவளது உடலினை அத்தெய்வம் கோவிலாகக் கொள்ள விரும்பினார். கணவன் என்ன சொல்வார், ஊர் என்ன கூறும் என்று கலங்கினாலும் கூட வல்லவர் செயலை அவர்களால் தடுக்க முடியவில்லை. காரணம், அவள் வளர்த்துக் கொண்ட திறந்த உள்ளம், அர்ப்பண உணர்வு தாராள மனம்போன்றவைகளேயாகும். 'ஆகட்டும்' என்று பதிலுரைத்ததும், – இவள் ஆண்டவரின் தாயானாள். அம்மனே! அப்பனே! என்று பக்தர்கள் கூறும் தெய்வமே, அம்மா! என்று அவளை அழைத்தது. இன்னும் அவளை அம்மா என்றழைக்காத உயிர் எதுவுமில்லை.

இறைவனின் அத்திருமகளை 'அருள் நிறைந்தவள்' என்று அருள் வளத்தால் நிரப்ப, அவளோ 'யாம் பெற்ற பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதற்கு அமைய தன் உறவினள் எலிசபேத்திற்கு பணிபுரிய ஓடோடிச் செல்லுகிறாள். அயலவர் பலரதும் தேவைகளை தன் சுமையாகக் கொண்டு அனைவரதும் துன்பம் துடைக்க துடித்து நின்றாள். சுருங்கக் கூறின், அவளது தாய் உள்ளம் குடும்ப வேலிகளைத் தாண்டிச் சென்றது.

அதுமட்டுமல்ல, இயேசுவின் பிறப்பு ஒரு பத்துமாத விடயம் மட்டுமல்ல; கருவிலிருந்து கல்வாரி வரை மகனோடு துன்பங்களை சுமந்து செல்லவேண்டிய நீண்ட பேறுகால வேதனையாயிற்று. பேறுகாலத்திலேயே இடம்பெயர்ந்த அனுபவமும், வளர்ப்பு வேளையில் ஏற்பட்ட ஏக்கங்களும், அவரது களத்தில் அவள் கண்ட காயங்களும், அவர்களது இணைந்த பயணத்தின் முக்கிய மைற்கற்களாகும். இத்தனைக்கும் மத்தியிலும் மரியாளின் மனம் புரட்சிக் கனவுகளிலேயே திளைத்து நின்றது. "வலியோரை அரியணையினின்று அகற்றி, தாழ்ந்தோரை உயர்த்தினார்" என்று இறைவனின் தீரச் செயல்களுக்கு கவி வடிவம் கொடுக்கிறாள். துன்பம் அவளது மனத்தை உருக்குலைய வைக்க முடியாத அளவுக்கு அவள் ஒரு எதையும் தாங்கும் இதயம் எனத் திகழ்ந்தாள்.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளின்பின்னும் கிறிஸ்து பிறப்பை ஒரு தனி நிகழ்ச்சியாக அவரது வாழ்வு. இறப்பு, உயிர்ப்பு போன்ற நிகழ்வுகளிலிருந்து வேறாக வகைப்படுத்துவது வெறுமனே வரலாற்று குறிப்பாகி விடும். மாறாக கிறிஸ்துவின் வாழ்க்கை; பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு நிகழ்வுகளோடு இணைந்து ஒட்டு மொத்தமாக அணுக வேண்டும். அதை கிறிஸ்து - நிகழ்ச்சி என்று கூறுவது பொருத்தமாகும்.

அந்த கிறிஸ்து – நிகழ்ச்சி மேடையேறுவதற்கு மரியாள் ஏற்ற ஒரு அரங்கமாக அமைந்தாள். கிறிஸ்து – நிகழ்ச்சியை விவரிக்க விழைந்த நற்செய்தியாளர் கூட மரியாளை அவ்வப்போது குறிப்பிட்டு சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. எனவே மரியாள் உண்மையில் நிகழ்ச்சிகளைக் கண்டு களித்த வெறும் பார்வையாளர் மட்டுமல்ல; அவள் முக்கிய பங்காளியாகவும் விளங்கினாள்.

எம் ஒவ்வொருவருடைய வாழ்க்கை வரலாற்றிலும் கிறிஸ்து - நிகழ்ச்சி இரண்டறக் கலக்கப்பட வேண்டும். இங்கு மரியாளின் மனநிலை, அவளுடைய நோக்குகளும், அவளில் மிளிர்ந்த பண்புகளும் எம்மில் இயக்கம் பெறும் போதே கிறிஸ்துவின் அவதாரம் எமக்கு மீட்பும் விடுதலையும் தரும் உண்மையான அனுபவமாகின்றது.

# வாழ்வின் ஒளி

கிறிஸ்துவின் வருகைக்காக அன்று வாழ்ந்த மக்கள் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டார்கள். காலங்களை எதிர்பார்த்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று நாம் எவ்வாறு கிறிஸ்து ஏசுவின் வருகையை எதிர் பார்க்கின்றோம். கிறிஸ்மஸ் எப்போது வரும் என்று சிறுவரும் ஆண்களும் பெண்களும் இன்று எதிர்பார்த்துக் கற்பனைசெய்கின்ற உலக ஆடம்பர முறையிலான திட்டங்கள் எத்தனை!

அன்று வாழ்ந்த மக்கள் மெசியாவைக் காண அறியாத ஒருவரைப் பார்க்கப் பல கோணங்களில் கற்பனை பண்ணிப் பார்த்தது ஒன்றும் விந்தையல்ல. ஆனால் இன்று வாழ்கின்ற "நாம் அறிந்த கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டும் ஏற்றுக் கொள்ளாதவர்களாக ஏன் வாழ்கின்றோம்" கிறிஸ்மஸ் தினத்தை நாம் எவ்வாறு எதிர்பார்க்கின்றோம்? வெறும் குழந்தைத்தனமான ஆடம்பரங்களோடும் வருடா வருடம் கட்டாயம் கொண்டாப்பட வேண்டிய வெளிச் சடங்கும் சம்பிரதாயமும் என்ற ரீதியில்தான். இதுவா கிறிஸ்மஸ் விழா"

எனது பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து என்னை விடுதலையாக்க இறைவன் அன்பு கூர்ந்து மனுவுருவானார் என்ற உண்மையை நான் உலகிற்கு வெளிப்படுத்த என்னையே நான் தாழ்த்துவேன். ஏசுவின் அன்புக்கட்டளைகளுக்கு தாழ் பணிந்து மரியன்னை எவ்வாறு கடவுளின் திட்டத்துக்கு அடிமையாகி தன்னை முழுதும் அவருக்கு அர்ப்பணித்து வாழ்ந்தாரோ, அப்படியே என்னையும் நான் முழுமையாக வெறுமையாக்குவேன். எனது நாளாந்த வாழ்க்கையை செபமாக மாற்றி என் அயலவன்மீது அன்பு காட்டுவேன். அப்போது என் இருதயம் மாசற்றதாய் இறைமகன் கிறிஸ்துவின் வருகையை ஏற்றுக் கொள்ளும் அப்பழுக்கற்ற உள்ளமாக மாறும் போது உண்மையில் நான் கிறிஸ்மஸ் தினத்தை தூய உள்ளத்தவனாக ஏற்று வாழ்கின்றேன். திவ்விய பாலன் நம் எல்லோர் உள்ளங்களிலும் பிறக்கவேண்டும். அப்போது பூத்துக் குலுங்கும் புது மலராக இறைவனின் கமல பாதத்தில் நைவேத்தியம் செய்யப்படும் ரோஜா மலராக என் வாழ்வில் இனிய நத்தார் வழிகாட்டும் ஒளியாகத் திகழும்.

அம்புறோஸ் குலாஸ்
பேசாலை

## இயேசுவின் பிறப்பில்

விடிவெள்ளி ஒன்று உதித்தது
விடுதலையினை நமக்களித்தது
விதியை மாற்றி யமைத்தது
விருப்புடன் நம்மை யணைத்தது

அருளின் காலம் பிறந்தது
இருளின் காலம் தொலைந்தது
அகிலம் அச்சம் களைந்தது
இறைவன் பிறந்த மகிழ்விலே

மாற்றம் எம்மில் நிகழட்டும்
மானிடம் அன்பில் வளரட்டு
மாபாவம் எல்லாம்
தொலையட்டும்
மாவீரன் இயேசுவின்
பிறப்பினிலே

இ. அன்ரனிதாஸ்
டலிமா



## புரியாத...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறைந்த மனித உடலை ஏற்ற பொழுது எவ்வாறு மனிதனைப்போல் இருந்தாரோ, அவ்வாறே மனித மொழியில் வெளிப்படும் இறைவனின் சொற்களும் மனித மொழியை ஒத்தே இருக்கின்றன.

(உருவகக் கதை)

# புனிதமான நாட்கள்

● K. R. டேவிட்

இரவு ஒன்பதுமணிக்கு மேலிருக்கும் மேடுபள்ளம் நிறைந்த வீதியில் எந்த வெளிச்சமுமின்றி மிகவும் வேகமாகச் சைக்கிளை ஓட்டுகிறான் அந்த மனிதன். சைக்கிளின் கரியரில் ஒரு மரப்பெட்டி, பெட்டிக்குள் இரண்டு ஆட்டுக்கடாக்கள்.

மிகவும் லாவகமாக அந்த ஆட்டுக் சுடாக்களின் கால்களை மடித்துப் பெட்டிக்குள் கிடத்தித் திமிறாதபடி கயிற்றினால் கட்டப்பட்டிருக்கின்றது.

நேற்று இரவு ஒருமணிவரையில் பிறந்தமண்ணில், வளர்த்தவர்களின் பாதுகாப்பில் நின்ற ஆடுகள், இரவு ஒரு மணிக்குப் பிறகு அங்கிருந்து இருவரால் எடுத்துவரப்பட்டு இன்னொரு வீட்டில் விடப்பட்டிருந்தன. இப்போது அந்த இருவரில் ஒருவனால் எடுத்துச் செல்லப்படுகின்றன...!

ஒன்றரை வயதை எட்டிநிற்கும் ஒரு கறுப்புக்கடா, எட்டு மாதம் பூர்த்தியடைந்த ஒரு சிவப்புக் கடா.

மார்கழிமாதப் பிற்பகுதி, கும்மென்ற மழை இருட்டு குளிர் காற்று

" அண்ணை " இளைய ஆடு மெதுவாக அழைக்கின்றது. அதன் குரலில் பீதி நிறைந்திருக்கின்றது.

" என்னதம்பி..." மூத்த ஆடு மெதுவாகக் கேட்கின்றது.

" சத்தம் போடாதை... அந்த மனிதன் பொல்லாதவனாக இருக்கிறான்... தெரிந்தால் அடிப்பான்..."

" எனக்குக் கால் வலிக்குது..."

" எனக்குந்தான் வலிக்குது... என்ன செய்கிறது... பேசாமல் கிட..." இளைய ஆடு அழ ஆரம்பிக்கின்றது.

" தம்பி... அழாதை ." புதியதொரு குரல் அந்த இளைய ஆட்டுக்கு ஆறுதல் கூறுகின்றது. ஆடுகள் இரண்டும் ஆச்சரியத்தோடு குரல் வந்த பக்கம் பார்க்கின்றன..

அந்தப் புதிய குரல்.. ஆடுகள் படுத்திருக்கும் பெட்டியினுடையது! ஆடுகள் ஆச்சரியத்தோடு பெட்டியைப் பார்க்கின்றன ..

" நீ யார்..." மூத்த ஆடு கேட்கிறது.

" நேற்றிரவு உங்களைச் சுமந்து வந்ததும் நான் தான்..." பெட்டி அனுதாபத்தோடு ஆடுகளைப் பார்க்கின்றது.

" அண்ணை நீயாவது சொல்லு... நாங்கள் எப்படி எடுத்துவரப்பட்டம்..." மூத்த ஆடு கேட்கின்றது.

" இவனும் இவனது நண்பனும் சேர்ந்து உங்களைக் களவெடுத்தார்கள்... அதனால்தான் இரவோடு இரவாக யாரும் காணாதபடி உங்களைக் கொண்டு செல்கிறான்... இவன் மிகவும் கெட்டவன். நான் இவனுக்குத் துணையாக நிற்கிறேன். என்னால் எதுவுமே செய்யமுடியாது. என்னையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றான்..." பெட்டி பெருமூச்சோடு கூறுகின்றது.

மேடு பள்ளம் நிறைந்த ஒரு றோட்டில் ஓடிக்கொண்டிருந்த சைக்கிள் ஒரு சந்தியை அண்மித்து, பிரதான வீதியில் மிதக்கின்றது.

" அண்ணை இது எந்தச்சந்தி..."

" இது கொட்டடிச் சந்தி.."

சந்தியின் இடதுபக்கமாக ஒரு கடையில் பெற்றோமாக்ஸ் பிரகாசமாக எரிகின்றது. ஏராளமானவர்கள் எதையோ முண்டியடித்து வாங்குகின்றனர்......

" மாமா..." இளைய ஆடு, அந்தப் பெட்டியை மாமாவென்று அழைக்கின்றது.

" என்ன தம்பி..."

" இந்தச் சனங்கள் என்ன வாங்குகிறார்கள்..."

" அது சாராயக் கடை அவர்கள் எல்லோரும் சாராயம் வாங்குகிறார்கள்..."

" இவ்வளவு மக்களும் மது அருந்துபவர்களா..."

" நாளைக்கு நத்தார் திருநாள்... அதனால்தான் வழமையைவிட அதிகமான மக்கள் நிற்கிறார்கள்... இன்று வாங்கிவைத்து நாளைக்குக் குடிப்பார்கள்...?"

"... நாளைக்கு நத்தார் திருநாளா... மனிதர்களை மட்டுமல்ல, எங்களைப் போன்றவர்களையும் நேசித்த யேசு மகான் பிறந்ததினம்..." மூத்த ஆடு நன்றியுணர்வோடு கூறுகின்றது.

சைக்கிள் ஓடிக்கொண்டிருக்கின்றது. சில நிமிடங்களில் இன்னொரு காட்சி அந்தக் குட்டியாட்டின் கவனத்தைக் கவர்கிறது,

மிகப் பெரியதொரு வீட்டின் முன்றலில் பலர் கூடியிருந்து ஏதோ விளையாடுகின்றனர்.

" மாமா இவர்கள் என்ன செய்கிறார்கள்..."

" அவர்கள் சூது விளையாடுகிறார்கள் "

" கடவுளே... அது கெட்டபழக்கமல்லவா..."

" உண்மைதான்... இதனால் அடிபிடிகள்... மரணங்கள் கூட ஏற்படும்..."

" இதை ஏன் அவர்கள் செய்கிறார்கள்.."

இன்றிரவு பன்னிரண்டு மணிக்கு யேசுபாலனின் பிறப்பைத் தரிசிப்பதற்கு நித்திரையைத் தவிர்க்கவேண்டுமென்பதற்காகச் சூது விளையாடுகிறார்கள்..."

மூவரும் சில நிமிடங்கள் மௌனமாக இருக்கின்றனர். சைக்கிள் ஓடிக்கொண்டிருக்கிறது.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

# இறப்பின் நிழலில் இருப்போர்க்கு ஒளிகாட்ட..!

**பேறு கால வேதனை**

இன்று நம் தமிழ்மண் இருளிலும், இறப்பின் நிழலிலும் சிக்கித் தவிக்கிறது. விடுதலை என்ற குழந்தையை பெற்றெடுப்பதற்காக இந்த மண் ஒரு பிரசவ வேதனையுறுகிறது. இன்று பாரிய வரலாற்றுத் திருப்பம் ஒன்று இந்த மண்ணில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இத்தகையதொரு சூழ்நிலையில்தான் அடிமை விலங்கொடித்து விடுதலை அளிக்க வந்த இயேசுவின் பிறப்பை நாம் இன்னொருமுறை எதிர்கொள்கிறோம். வேதனைகளால் வெந்து, விரக்தியின் விளிம்பில் நிற்கும் எமக்கு மீட்பர் இயேசுவின் வருகை நம்பிக்கையையும், ஆறுதலையும் அளிக்கிறது. இதையே பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட சக்கரியாஸ் கூறுகின்றார்.

இருளிலும் இறப்பின் நிழலிலும்
இருப்போர்க்கு ஒளி காட்டவும்
அமைதிப் பாதையில்
நம் காலடிகளைச் செலுத்தவும்
நம் கடவுளின்
இரக்கப் பெருக்கத்தால்
வானின்று இளஞாயிறு நம்பால்
எழுந்து வரும்.

(லூக். 1 : 78 - 79)

இருளிலும் இறப்பின் நிழலிலும் இருக்கும் எமக்கு வழி காட்ட ஒரு ஒளி தேவை. இது தவிர்க்க முடியாத ஒரு தேவை. பாதைகள் பல உண்டு. வழி காட்டும் பாதைகளை நோக்கி விழிகள் எல்லாம் விரைகின்றன. ஆனால் ஒளியின் பாதை எது என்பதே கேள்விக் குறியாகிறது. அழிவுக்குச் செல்லும் பாதை அகலமானது. (மத். 7 : 13) அதனால்தான் இதில் பலர் பயணப்படுகின்றனர். கிறிஸ்து எமக்கு பாதை காட்டவில்லை. மாறாக தானே உண்மையான பாதை (லூக். 10 : 8) என உரைக்கின்றார். அப்படியானால் கிறிஸ்து என்ற பாதை பயங்கரமானதா? உண்மைதான். துன்பக் கடலில் கர்ப்பமாகி சிலுவைக் கடலில் பிறந்தது தான் கிறிஸ்தவம். கிறிஸ்துவும், அவர் வழி வந்த கிறிஸ்தவர்களும் பட்ட வேதனைகளே அதன் சாதனைகள். இறையரசை இவ்வுலகில் எழுப்ப வேண்டுமா? துன்பத்தைத் தவிர சிறந்த செங்கல் இல்லை. துன்பத்திலிருந்த இயேசுவைக் காப்பாற்ற இராயப்பர் முயன்றபோது "தூரப்போ சாத்தானே" (மாற். 8 : 33) என்ற சுடு சொல்தான் கிடைத்தது. இறந்தால்தான் உயிர்க்க முடியும் என்பதை அறிந்தவர் இயேசு. இறையரசின் பங்காளிகளும் இயேசுவின் வழியில் செல்லவேண்டும். அவரே வழி (லூக். 10 : 8) அவரே ஒளி (அரு. 8 : 12) இது ஒரு பாஸ்காப் பயணம். அக்கினிப் பயணம். இதில்தான் நடக்க வேண்டும்.

அமைதிப் பாதையில் நம் காலடிகள்.

இயேசு வழங்கும் அமைதி சாதாரண அமைதி அல்ல. அது வாளுடன் வரும் அமைதி. (மத். 10 : 34) போராட்டத்தால் பிறப்பெடுக்கும் இந்த அமைதி கல்லறையில் வாழும் போலி அமைதி போன்றதன்று. அங்கே உயிரும் இல்லை. உணர்வும் இல்லை. எனவே உள்ளப் போராட்டங்களுக்கும் இடம் இல்லை. போருக்குப் பின்வரும் அமைதியும் போலி அமைதியே. ஏனென்றால் போரில் தோல்வியுற்றவள் அடுத்த போருக்கு தன்னை ஆயத்தம் செய்வாள். தோல்வி கண்டவள் அவமானமும், வெற்றி கண்டவள் ஆணவமும் கொள்ளும் போது, அங்கே பேதங்களும், பிரிவினைகளும் பெரிதாகின்றன. எனவே சண்டை இல்லாத நிலைதான் சமாதானம் என்பது பொய். அமைதி வெளியில் அல்ல. ஒவ்வொரு மனித இதயத்தினுள் இருந்தும் வரவேண்டியது.

● தமிழ் நேசன்
புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி

கடவுளின் இரக்கப் பெருக்கு துன்பங்களைத் துரத்தாமல் நாம் நடக்கும்போது இயேசுவின் வழியில் நாம் நடக்கிறோம் என்பது பொருள். வெளி அமைதியைத் தேடாமல் வாளுடன் கூடிய (மத். 10 : 34) அமைதியை அகத்திலே நாடும் பொழுது உண்மை அமைதியை அனுபவிக்கின்றோம். இப்படியான, ஒரு சவால் நிறைந்த வாழ்வை வாழ முனையும் போது இறைவனின் இரக்கப் பெருக்கு எம்மை இறுகப் பற்றுவது உறுதியிலும் உறுதி.

நீதிக்காக, நியாயமான கோரிக்கைக்காக இன்று இந்த மண்ணும், மக்களும் துன்புறுகின்றனர். நமது மூதாதையரின் புராணங்களும், இதிகாசங்களும் திரும்ப திரும்ப நமக்கு எதைச் சொல்கின்றன? தர்மம் வெல்லும், என்பதைத்தானே நீதியின் பக்கமே இறைவனின் இரக்கம் எப்போதும் இருக்கும். இறை இரக்கம் பெருக்கெடுக்கிறது. அது இறைவனைத் தேடும் இதயங்களை எல்லாம் ஈரப்படுத்துகிறது. இளைத்துக் களைத்து வருவோரை வரவேற்கிறது.

வானினின்று இளஞாயிறு நம்பால் எழுந்து வருகிறது.

நமது நம்பிக்கை வீண் போகவில்லை. நாம் சிந்திய கண்ணீருக்கும், செந்நீருக்கும் விலை உண்டு. வாழ்வின் சோகங்கள் எல்லாம் இனிச் சுகங்களாகும். துன்பங்கள் துடைக்கப்படும். ஏனென்றால் இதோ "வானில் நின்று இளஞாயிறு நம்பால் எழுந்து வருகிறது. (லூக். 1 : 79) இறைவன் ஒரு நாடகம் ஆடுகின்றார். விண்ணக இறைவன் மண்ணில் மனிதனாகப் பிறக்கிறார். இது உலகமே கண்டிராத, கேள்வியுறாத ஒரு மாபெரும் அற்புதம் இறை நிலையிலிருந்து மனித நிலைக்கு இறைவன் இறங்கி வருகின்றார் (பிலி. 2 : 7). ஏன் எதற்காக? இந்த மண்ணின் மக்கள் மீட்சி பெற உடைந்த உள்ளங்கள் மீண்டும் உருப்பெற, உருகும் விழிகள் உயிர்ப்புப்பெற, நமது கனவுகள் நனவாக. இயேசு இந்த மண்ணில் பிறக்கிறார். மக்களின் மனங்களில் பிறக்கின்றார். ஆகவே "இனிச் சாவில்லை. புலம்பலில்லை அழுகையில்லை, நோவில்லை. முன்பிருந்தவை மறைந்து போயின (திருவெளி. 21 : 3). எனவே புதுயுகத்தை நோக்கிய எமது பயணம் தொடரட்டும். சவால்களைச் சந்திப்போம். சரித்திரம் படைப்போம். ஏனென்றால் "கடவுள் நம்மோடு" (மத். 2 : 23).

## அன்பிற்கு ஒரு விழா

நத்தார் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து உள்ளங்களும் சமாதானத்தை பெறத்துடிக்கின்றன; அன்று இயேசு பிறந்தபொழுது வான் உலக தூதர் 'உன்னதங்களில் சருவேசுரனுக்குமகிமையும் பூமியில் நல்ல மனம் உள்ளவர்களுக்கு சமாதானமும் உண்டாகுக' என்று கீதம் இசைத்ததாகக் கூறப்பட்டுள்ளது; ஆனால் இன்று உலகில் எத்தனை நாடுகள் அமைதி இழந்து சமாதானமின்றி அல்லல் படுகின்றன. நாட்டுக்கு நாடு, வீட்டுக்கு வீடு, இனத்துக்கு இனம், ''கை, சண்டை குடும்பங்களில் சச்சரவு, சுருங்கக் கூறின் அன்று குழந்தை இயேசு போதித்த சமாதானம் அருகிக் கருகி கானல் நீராக மாறி விட்டது.

நத்தார் பண்டிகை என்றால் அனேகமாக கிறிஸ்தவர்களின் இல்லங்களில் உற்றார் உறவினர் சூழ தத்தமது இயல்புக்கு ஏற்ப கொண்டாட்டங்கள் கேளிக்கைகளில் ஈடுபடுவதையும், ஆலயங்களில் பக்தர்கள் பக்தி சிரத்தையுடன் காணிக்கைகள் செலுத்துவதையும் காணலாம்.

ஆனால் அதே சமயம் கோவில் வாசல்களில் உண்ண உணவோ, உடுக்க உடையோ, உறங்க இடமோ இன்றி அல்லல்படும் ஏழைகளுக்கும், கோவிலைச் சுற்றியுள்ள மரங்களின் கீழும் மண்டபங்களிலும் அரசின் அடாவடித் தனத்தினால் தம்மிடம் இருந்த சொத்து சுகம் யாவற்றையும் இழந்து எந்தவித சௌகரியங்களும் இன்றி அல்லலுறும் அகதிகளுக்கு அன்றைய தினத்திலாவது தம்மால் இயன்ற உதவி உபகாரத்தை செய்பவர்கள் எத்தனை பேர்!!

(கப்ரின்)
டீ. ஏ. எம். குணசிங்கம்

அன்பிற்கு விழா எடுப்பது தான் கிறிஸ்மஸ், அந்நாளில் நாம் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வது எதற்காக? நம் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் அன்பினையும் நம் இருதயத்தில் இருக்கும் பாசத்தையும் பிறருடன் பகிர்ந்து கொள்வதற்காக என்பதனை எவரும் மறுக்க முடியாது;

எனவே இந்த விழா அர்த்தமுள்ளதாக அமைய வெளி ஆடம்பரங்கள் வீண் செலவுகள் செய்யாமல், "உன் சகோதரர்களுக்கு உதவி செய்யும் போதெல்லாம் எனக்கே உதவி செய்தாய்" என்று இயேசு பிரான் கூறியதை மனதிற் கொண்டு, ஒடுக்கப்பட்டவர்கள் உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள், ஊரைவிட்டே துரத்தப்பட்டவர்கள், வாழ்விழந்து வழியிழந்துசொந்தக்குடும்பம்என்று ஒன்று கூட இல்லாமல் துரத்தி அடிக்கப்பட்டு ஆதரவு அற்ற நிலையில் அகதிகளாக அல்லல் உற்றோருக்கு, உற்றார் உறவினரை இழந்து தவிப்போருக்கு, அரசின் அரக்கத்தனத்தால் அங்கவீனராய் ஊனம் உற்றோருக்கு, எமது நேசக் கரங்களை நீட்டி அன்பும் ஆதரவும் காட்டி நம்மால் இயன்றதை நல்கி, எல்லோரும் இன்புற்றிருக்கும் வகையில் கிறிஸ்தோதய விழாவைக் கொண்டாடுவோமாக:

## அவரும் ஒரு அகதி

இக்கிறிஸ்மஸ் கால நிகழ்வுகளை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இறைமகன் கிறிஸ்து பிறந்த கால நிகழ்வுகளோடு சிந்திப்பது எமக்கு மன அமைதியை, ஆறுதலை தரவல்லதாயிருக்கும். சமகால நிகழ்வுகளுடன் அன்று கிறிஸ்து இருந்த நிலையையும், ஒப்பு நோக்கின் வடக்கிலும் கிழக்கிலும் சொந்த மண்ணிலே அகதிகளாகி, இடம் பெயர்ந்து, அல்லற்படும் நம்மவர்க்கும், உலகின் பல்வேறு நாடுகளிலும் மனித நேயமற்ற, நீதியற்ற ஆக்கிரமிப்புகளால் நசிக்கப்பட்டு நலிந்து சுதந்திரத்தை இழந்து அகதிகள் என்று நாமஞ் சூட்டப்பட்டு சொல்லொணாத்துயர்களில் துவண்டு வாழும் பல்லாயிரம் மக்களுக்கும் இயேசு ஒரு அனுபவமாய், அவரும் இவ்வித நிகழ்வுகளுக்கு உட்பட்டவராய் வாழ்ந்தார் என்பது அனைத்து மக்களின் துயரங்களுக்கும் நடுவேயும் ஆன்மீக பலத்தையும் நம்பிக்கையையும், துன்பங்களை எதிர் கொள்ளும் திடசித்தத்தை, மனப்பக்குவத்தை அளிக்கவல்லதாகவே அமைந்துள்ளது.

இறைமகனும் ஒரு அகதி. அவரது குழந்தைப்பருவம் அகதி வாழ்வின் அனுபவத்தை எடுத்தியம்புகின்றது.

விண்ணையும் மண்ணையும் படைத்த இறைவனுக்கு தலை சாய்க்க இடமில்லை. அரச பரம்பரையில் உதித்த மரியாளும் சூசையும் மாட்டடை குடிலில் தங்கும் ஈன நிலை. இயேசுவை மரியாள் பெற்றெடுத்த சூழ்நிலையை நோக்கினால் என்ன பரிதாபம். யாருமே உதவிக்கு இல்லை; மருத்துவமாதோ, வயது சென்ற பாட்டிமாரோ இல்லை; மிருகவாடை, மிருகங்களின் கழிவுகளின் நெடில்; நள்ளிரவு; நடுங்குங்குளிர்; வைக்கோலே அணையாக, கந்தையே போர்வையாக குழந்தை இயேசுவுக்குக் கிடைக்கின்றன. ஏழ்மையின் மாட்சியை, தரித்திரத்தின் மகத்துவத்தை, எளிமையின் ஏற்றத்தை எமக்குப் படிப்பிக்கவே இறைவன் இக்கோலத்தை ஏற்றார். முதன் முதலில் அவரை வந்து பணிந்தவர்களும் ஏழை இடையவர்களே.

ஏரோது அரசன் தனக்கு விரோதியாக, மாற்றானாக 'யூதர்களுக்கு ஒரு அரசன் பிறந்திருக்கிறார்' என கீழ்த்திசை ஞானிகள் கூறியபோது வெகுண்டான்; அஞ்சிக்கலங்கினான். அந்தப்பாலனை முளையிலேயே கிள்ளிவிட, பகையை அழித்துவிட திட்டம் தீட்டினான். மிகவும் பயங்கரமான, வரலாற்றிலே நிகழ்ந்த மிக கொடுமையான கொலை பாதகத்தை அஞ்சாது செய்யத் துணிந்தான். யூதேயா எங்கும் இருந்த இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகளை எல்லாம் வெட்டிக் கொல்லுமாறு ஆணைபிறப்பித்தான். அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. படைவீரர் மிருகத்தனமாக பச்சிளம் பாலகரைக் கொன்று குவித்தனர். தேவதூதன் சூசைக்குக் கனவில் தோன்றி, 'குழந்தையை எடுத்துக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போ' என்று அறிவிக்கின்றார். சூசை தயங்கினார். இரவோடு இரவாக அன்னிய நாட்டுக்கு ஓடுவது எப்படி? 180 மைல் அளவு தொலைவில் உள்ள ஊருக்கு தன்னந்தனியே பயணஞ்செய்வது அன்றைய நாட்களில் எவ்வளவு சிரமம். இறைவனின் மகனை காப்பாற்ற வேண்டுமே. பிரமாணிக்கமுள்ள ஊழியனான சூசை இறைவனின் சித்தத்தை ஏற்கிறார். மரியாளையும், பாலகன் இயேசுவையும் அழைத்துக்கொண்டு பயங்கரமான பயணத்தை மேற்கொண்டார்.

இந்த நீண்ட பயணத்தில் திருக்குடும்பம் அனுபவித்த இன்னல்கள், துன்ப அனுபவங்கள் எமது காலத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் வடக்கிலும், கிழக்கிலும், மக்கள் புகலிடம் தேடி. அடைக்கலம் தேடி, பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றபோது பட்டதுன்பங்களோடு ஒப்பிடத்தக்கவை அல்லவா? அகதியாக இறைமகன் இயேசுவும் இவ்வாறான துன்ப நிகழ்வுகளை அனுபவித்தார். ஆனாலும் இறைவன் அவரை அழிவில் நின்று காப்பாற்றினார்.

எஸ். எம். ஜே.

# சிறுகதை

# புதிய பிறப்புக்கள்

● யோசப் பாலா



மழை மூட்டம், பனிக் குளிரும் மாறும் காலநிலையும் அந்த மாரி காலத்தின் பல நிகழ்வுகளை நினைவூட்டிக் கொண்டிருந்தது. மழையில் நனைந்து வெய்யிலில் காய்ந்து தன் உழைப்பிற்கு திருமலைக் கடலையே நம்பி வாழ்ந்த சூசை பிடிக்கும் மீனை விற்று அன்றாடம் சீவிக்கும் குடும்பத்தவன்.

என்றும் போல அவன் பிடித்த மீனை விற்பதற்காக அவனது சைக்கில் வண்டியில் புறப்பட்டான். விரக்தியின் விபரத்தை அவனது முகத்தில் வளர்ந்து சடைத்துவிட்டதாடியும் மீசையும் உள் விழுந்த கண்களும் அவனை ஒரு மனிதத் தோற்றமாகக் காட்டிக் கொண்டது.

முன்பு போல அதிக தூரம் சென்று தொழில் செய்துவர முடியாத சூழல். தூர இடங்களுக்குச் சென்று விற்று வர முடியாதபாதுகாப்பற்ற நிலை. இன்று எல்லோருக்கும் ஏற்பட்டது போல்தான் சூசைக்கும் பல நெருக்கடிகளைத் தந்தது.

சூசையின் உறவினர் பலர் இருந்தும் குடும்பம் என மேரியோடு மணம் முடித்து விட்ட காலம் முதல் தானுண்டு, தன் வேலையுண்டு என மிகுதி நேரத்தை அந்த மாதாகோவில் மணி அடிப்பது முதல் ஆராதனைகளுக்கு ஆயத்தம் செய்வது வரை தன் பணிகளை இறைவனுக்கு அர்ப்பணித்து வருவதில் அவனும் மனைவி மேரியும் மகிழ்வில் இணைவார்கள்.

வருவாய்க்கு மிஞ்சிய செலவைத் தாங்காது அன்றாட வாழ்க்கையின் நிலையுணர்ந்து வீதி வியாபாரத்துக்கு சந்தையில் மீன் எடுக்க கடற்கரை சென்ற சூசைக்கு ஏக்கத்தைக் கொடுத்தது. அவனது விற்பனை வழிகளும் பாதுகாப்புக் கருதி குச்சொழுங்கை வழியாக கடன்பட்ட மீனை விற்று வருவது அவன் கண்ட அனுபவங்களே. இவை இன்று சூசைக்கு சவாலாக இருந்தன.

காரணமே புரியாத பதட்டம், தரையும் வானும் முழங்கும் ஒலிகள். எல்லோரும் ஒரே திசைநோக்கி ஓட்டமும் நடையுமாக மூட்டை, முடிச்சுகளுடன் இடம்பெயர தொடங்க அந்த பயணம் ஒவ்வொருவரின் வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப ஓலைப்பை, சீலைப்பை, உரப்பை, சொப்பிங்பாக், சூட்கேசுகள், மூட்டை கட்டப்பட்ட பாலைவனப் பயணங்கள் போன்று ஓடுவதில் அன்றைய ஒட்டக, குதிரைகள் போன்று மிதிவண்டிகள் தள்ளுவண்டிகள் மனித உடல்கள் கூட மாடாக சுமந்து செல்லும் பயணம் நேரம் செல்லச்செல்ல சத்தமும், சஞ்சலமும் ஓயாத ஒலியாக தொடர்ந்ததை எண்ணி எண்ணியே மனப்பிரமையுடன் ஓடிவரும் மக்களிடத்தே மனைவி மேரியும் வருவாளா எனத்தேடி அலைந்தான்.

அங்கு சென்று வர தடை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவித்து நகர்வதால் நகரமே நகர்ந்து கிராமத்தை நிறைத்து வருவதும் ஒளியை விரட்டும் இருளாக இரவு அண்மிப்பதும் பதட்டத்தை ஏற்படுத்தவே மிதிவண்டியை தெரிந்த வீட்டில் விட்டு விட்டு ஓட்டமும் நடையுமாக தேடி அலைந்த சூசைக்கு மேரியின் தோற்றம் அந்த இருள் கவ்வும் நேரத்திலும் ஒளியாகத் தெரிந்து கொண்டது.

வீதி வழிப் பயணம் தடைப்பட்டு ஒற்றையடிப் பாதை வழியே நடைபோட ஆரம்பித்த மக்கள் கூட்டத்துடன் சூசையும், மேரியும் கண்ணீர் மல்க மனப்பாரமும், உடற்பாரமும் இளைக்க இளைக்க விளக்கமுடியா விபரத்தையும் சுமந்து சென்றனர்.

சென்ற ஞாயிறுதான் கிறீஸ்து பிறப்புக்கான சிந்தனைகளையும் அந்த சூழல் பற்றியும் குருவானவர் லோறன்ஸ் பிரசங்கித்தாரே. அவை பல பிராக்குடன் காதில் விழுந்த வார்த்தைகள், "பிறக்க விருக்கும் மகனைத் தேடுவதால் ஊரை விட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம். தேவதூதனால் அருளப்பட்டபடி சூசையும் தேவதாயும் கழுதையில் பயணம் மேற்கொண்டார்கள். அந்த பயணத்தில் பாலை வனங்களைத்தாண்டி தலைமறைவான வாழ்வைத் தேடிச் சென்றது இறைவன் சித்தமென ஏற்று புறப்பட்டார்கள்.'' அந்தவார்த்தைகளை ஆண்டுக்கொருமுறை கேட்டுக் கொண்டாலும் அதன் அர்த்தம், அதன் அனுபவம் புரியாது எங்கோ எப்போதோ, வசதி குறைந்த காலத்தில் அப்படி அனுபவிக்க ஏற்பட்டதாக பழைய கதைபோல் பட்டாலும் இன்றைய நடைமுறைகள், சூசைக்கும் மேரிக்கும் இறைவார்த்தைகளின அனுபவங்களைப் பெறவைத்தது.

''இந்த வீதியால எங்க போகிறோம்" மேரியின் கேள்விக்கு பதில் சொல்ல சூசைக்கு சங்கடமாய் இருந்தது. அவனுக்கும் அது புதிய பயணம் தான். சொந்த இடத்தை விட்டு புறப்பட்ட எல்லோருக்கும் ஏற்பட்ட, அனுபவத்தை அனுபவிக்கும் போதுதானே அந்த நிலையை சரியாக உணர முடிகிறது. தன்னை ஒரு குடும்பத் தலைவனாக நினைத்து பதட்டத்தை அடக்கி பொறுப்புடன் நடந்து கொள்ள கூறிய வார்த்தைகள்.

"இது முல்லைத்தீவுப் பகுதியால் செல்லும் பாதையாம். காட்டுப்பாதைதான். பலரும் போய் வந்த் பழக்கத்தால் இது இப்போ ஒரு பிரதான பாதையாகிவிட்டது'' என்றான் சூசை.

இருட்டிலதான் இப்பாதையில் செல்ல வேண்டும். இல்லை என்றால்... உயிருக்கு ஆபத்துதான். இந்த சூழலில் கதைப்பது கூட யாருக்கும் கேட்டாலே ஆபத்துத்தான்.''

இந்த மிரட்டல் பேச்சின் உண்மைகளை உணர முடியாத பயப்பிரமை மேரியை வாட்டியது. உடல் உழைவும் மன உழைவும் பெரும் களைப்பினை மேரிக்கு ஏற்படுத்தியது. இருந்தும் மெளன ஊர்வலத்தில் செல்வதுபோல் பெரும் சிரமத்தைத் தாங்கிக்கொண்டாள். அவள் கையைப் பற்றிவந்த சூசைக்கு அவளது கையின் இறுக்கம் அவளது களைப்பினை உணர்த்தியது.

"மேரி... மேரி.. களைப்பு எண்டா கொஞ்சம் இருந்து போவம்.'' ''ஐயோ நீங்கள் சத்தமாக கதைப்பது எனக்கு பயமாய் இருக்குது.'' ''என்ன செய்வது மேரி துன்பம் ஏற்றுக் கொண்டு சென்றால் தான் நல்ல சுகத்தையும் அனுபவிக்கலாம்.''

''இப்பிடி ஒரு கஸ்ரம் கடவுள் நமக்கு விட்டு விட்டாரே.''

"பாத்தியா நீ கூட மனம் தளருகிறாயே, பாலைவன பயணத்தைக் கடந்து அந்தப் பாலனை பெற்றெடுக்க அந்த அன்னை எத்தனையைத் தாங்கியிருப்பாள். இப்படி பல மைல்களைக் கடந்துதானே அவளும் செல்ல வேண்டியிருந்தது."

அவனது பேச்சுகள் இறை பக்திக்கு வலுவூட்டுவதுடன் அவனது மனதிலும் அந்த நிகழ்வுகளை ஒருகணம் உணர வைத்தது.

மழை நீரால் வெள்ளக் காடான இடத்தை மூட்டை முடிச்சுகளுடன் ஆற்றைக் கடப்பது போன்ற பயணம் கொம்படிப் பயணம் எனக் கூறிய இடமாக இருக்கும் என எண்ணிய சூசை மிக சிரமத்துடன் கடந்து செல்கையில் அந்த இருளில் அருகில் செல்பவர்கள் கூட யார் யார் என புரிந்து கொள்ள முடியாத பயணம். பலதரப்பட்ட தோற்றங்களில் தங்களின் வசதி வாய்ப்புகள், பொருள் பண்டங்கள், பட்டம், பதவிகள், எல்லாம் மறந்த ஒரு வெறுமை நிலையில் பயப் பிரமையுடன் பயணம் செய்வோரின் முனங்கலும் உறவுகள் பிரிந்த நிலைகளையும் எடுத்தியம்பின சூசைக்கு.

மேரி... மேரி கொம்படியைக் கடந்திட்டம் தானே. இந்த மரத்தடியில் கொஞ்சம் தங்கிச் செல்வோமா "என்ற சூசையின் வேண்டுகோளுக்கு, ''இந்தக் காட்டிலா... எப்படியும் அடுத்த கிராமத்துக்கு நடந்து போவோம்.'' என்ற மேரியின் தளதளத்த குரல் ஆறுதல் கூறின. எந்த தைரியமும் இல்லாத சூசையின் மனதில் அவளது கர்ப்பிணிக் கோலம் சூசைக்கு கண்ணீரைப் பனிக்கச் செய்தது.

எல்லோர் மனதிலும் பயப் பிரமையுடன் செல்லுகையில் சூசையின் மனமோ கடவுளின் படைப்புகளை எண்ணி வியந்தனவாய், 'மனிதனை மனிதன் அழிக்க முற்படுகிறான். அந்த மனித மனங்களை மாற்றத்தானே மனித உருவில் இறைவனே பிறந்தார். அந்த மனிதராலே அவரையே அழிக்கவும் அந்த மனிதன் துணிந்தான். மனிதப் பிறப்பின் மகத்துவத்தையுணர்ந்தால் இந்த மரணங்கள் இந்த அழிவுகள் இந்த அடக்குமுறைகள், இந்த அவலநிலைகள் எதுவுமே இடம் பெறாதே?' என்ற சலிப்புடன் வேதனைகளையும், சோதனைகளையும் தாங்கிச் சென்றவனுக்கு மேரியின் நடைத்தளர்வு அவனது நம்பிக்கையை இழக்கச் செய்தது.

நட்டாற்றுப் பயணம்போல இடை நடுவே தளர்ச்சியுற்றாலும் தரித்துச்செல்ல முடியாத அந்தப் பரந்த வெளி பெரும் சவாலாய் இருந்தது. தொலைவில் ஓர் கிராமம்சனநடமாட்டமுடன் அதிகாலைப் பொழுது புலர்ந்தபோது நம்பிக்கை விதைகளை மனதில் விதைத்தவனாய் விரைவுபடுத்தினான். நடையினால் மேரியின் கால்கள் வீக்கமுற்று உடல் இளைப்புடன் சுமையும் ஓரடி கூட நகர மறுத்த உடல் வலிகளும் அந்த விடியலின் சூழலில் நம்பிக்கைக் கீற்றுக்கள் மனதில் எழ இறுதிமுயற்சிபோல் வேகம் பெற்றன.


ஏதோ எதிர்பார்ப்பு குதூகலம், அக்கிராமத்தவரிடையே இருப்பதுகண்டு நம்பிக்கையுடன் சூசை குடும்பத்தினர் மட்டுமல்ல, அந்த பயணத்தைத் தொடர்ந்த பல ஜீவன்களும் புதிய உத்வேகத்துடன் நெருங்கினார்கள். ஆலயம் பாடசாலை, எங்கும் நிறைந்திருந்த பல பகுதிப் பயணிகள் இடம்பெயர்ந்த ஜீவன்கள் தான் என்பதனை அவர்களது பொட்டலங்களும், ஒதுக்கிடங்களும் நிரந்தரமற்ற சூழலை ஏற்படுத்தினாலும் அதில் ஒதுங்குவதற்கு சூசையும் மேரியும் முயன்றும் முடியவில்லை.

முன்னம் வந்தவர்கள் நிறைந்துவிட்டதால் அந்த முகாமையும் மூடிவிட்டார்கள். "புதியவர் வேறு இடம் செல்லவும்.'' என மாட்டப்பட்டிருந்த விளம்பரப்பலகை ஏமாற்றத்தைக் கொடுத்தது. அன்றுமட்டுமல்ல இன்றும் இன்னலுறும் மக்களுக்கு "சத்திரத்திற் கூட இடமில்லையே என ஏக்கமுடன் அருகில் உள்ள வீட்டு வாசல்களை நாடியவனுக்கு பூட்டுக்கள் பலவும் ஏற்க மறுத்தன.

அந்தச் சூழலுக்கு மத்தியில் மழையும் பனியும், நுளம்பும், குளிரும், பசியும் களைப்பும் எல்லோர் முகத்திலும் ஏக்கத்தை ஏற்படுத்த மணி ஓசையும் மங்கள நிகழ்வுகளும் அக்கிராமத்தில் ஆங்காங்கே கிறிஸ்மஸ் நினைவை நினைவூட்டிக் கொண்டிருந்தன. பாதுகாப்பு எனத் தேடிவந்த இங்கும் தொடரும் அதே சீன வெடிகளும் வாண வேடிக்கைகளும் போலவே பலவித முழக்கங்கள் மத்தியில் பாலன் குடில்கள் போல அசுதிக்குடில்களெல்லாம் முன்னைய கிறிஸ்மஸ் நிகழ்வுகளை நேரிலே காணும் புதிய அனுபவத்தை ஏற்படுத்த, இருள் சூழ்ந்த வேளை வழியேதுமின்றித் தவிக்கையில் மேரியின் பிரசவ வேதனைகண்டு அந்த வீதியில் இருந்து ஓரத்தே இடிந்து சரிந்துநிற்கும் வீட்டை நோக்கி மேரியைக் கூட்டிச் சென்றான் சூசை.

தூரத்தே கேட்கும் ஆலய மணியோசையும், அந்த இருவில் மேரியின் முனங்கலுடன் மழலையில் சிணுங்கல் ஒலியும் அவன் செவிப்பறையிற் பட்டு சூசையின் மனதிற்கு மகிழ்ச்சியூட்டும் நம்பிக்கை ஒளிக்கீற்றாக்க, புதிய பாலகனின் பிறப்பொன்றை இந்தமண்ணும் தாங்கிக்கொண்டது,

## வடக்கிலே ஓர் வால்வெள்ளி



ஆண்டாண்டு கால மாக
அமைத்து வாழ்ந்த இல்லிடங்கள்
மூண் டெழுந்த போரினாலே
முடமாகிப் போகினவே
மாண்டார் சுடுகாடாய்
மாறிவிட்ட நிலையினிலே
வேண்டாத அகதிநிலை
விரைந்து வந்து புகுந்ததுவே

கடும் குளிரின் இரவினிலே
கடவுள் மகன் பிறந்த செய்தி
நடுச் சாம இடையருக்கு
நற்செய்தி யான தன்று
நடுநிசியில் வால் வெள்ளி
ஞானியரை வழி நடத்தியதே
கொடுங் கோலன் ஏரோதோ
கொதிப் படைந்தான் செய்திகேட்டு

விடிவொன்று கிடைக்காதா
விடுதலையின் மக்களுக்கு
முடிவொன்று வாராதா
முன்வாழ்வைக் காண்பதற்கு
அடிதடிகள் ஓயாதா
அமைதிவந்து பிறக்காதா
விடிவெள்ளி பூக்காதா
விடியலை நாம் காண்பதற்கு

— அபிர்ராஜன்

## வஞ்சரடி பணிய அவதார மெடுத்தாயே

ஒருமழலை எனவந்த உம்பர்புர நாதா
ஓதுமறை அருள்தங்கு மொப்பரிய தாதா
கருணை விழி ஒளிதங்கு மொழியமுத தேவா
கன்னிமரி திருமடியில் தவழ்கின்ற வேதா
நரர்கள்பவ மகற்றுமனு நாயகவி னோதா
ஞாயிற்றுப் பொற்கிரண கதிரெறிசொ ரூபா
தருமவழி ஞானநற் சிலந்த ழைக்க ( த் )
தக்கவழி காட்டியே நீயருள வாவா

அலைபொங்கி எழுகின்ற கடல்சூழி லங்கை
எழில்குன்றி வடகிழக் கெல்லாமிழந்து
அலைகின்ற அகதிகளின் கண்ணீர் துடைக்க
அருள்தங்கு மொழிகொண்டு அவதார மானாய்
உருவற்று நடமாடும் மனிதப்பி ணங்கள்
உறைவதற் கொருவீடு இல்லை யழிக்கின்றார்
தெருவெலாந் திரிகின்ற செந்தமிழர் கூட்டம்
சீர்பெற்று வாழ்ந்திடத் தேவனே வாவா

முல்லைக்கவி

## நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளது

☐ சூசைப்பிள்ளை ஜெனிஸ்ரா

உண்மையில் ''கிறிஸ்து பிறப்பு'' என்பதன் அர்த்தம் என்ன கிறிஸ்துவை எமது மீட்பராய் ஏற்றுக் கொள்ளும் நாம் அவர் எம் ஒவ்வொருவருடைய இதயங்களிலும், இல்லங்களிலும் மீண்டும் பிறக்கிறார் என்பதை நம்ப வேண்டும். அப்படியானால் நாம் உண்மையாக அவரை வரவேற்க ஆயத்தமாக இருக்கின்றோமா?

பல்வேறுபட்ட மக்கள் யேசுவின் மனிதாவதாரம் என்னும் நாடகத்தில் பல்வேறு பாத்திரங்களில் நடித்தார்கள். இப்போது இங்கே எங்கள் மத்தியில் குழந்தை யேசு பிறக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். எமது பாத்திரம் எப்படியானதாய் இருக்கும்? நெடுந்தூரம் பயணமாகி விலையுயர்ந்த பரிசுப் பொருட்களைக் கொடுத்த கீழைத்தேச ஞானிகளைப் போல் அவரை நாமும் மாட்டுத் தொழுவம் வரை சென்று வணங்க ஆயத்தமாக இருக்கின்றோமா? அல்லது ஏரோது போல் அவரை ஒழித்துக் கட்டத் தேடுவோமா?

இக்காலம் வறுமையின் காலம், எங்கள் மத்தியிலுள்ள பசியால் வாடும் ஒவ்வாரு ஏழையின் முகத்திலும் யேசுவைக் காணவேண்டிய ஒரு காலம், யாரிடமிருந்தாவது அன்பும், கரிசனையும் எமக்குக் கிடைக்காதா என்று ஏங்குகின்ற எல்லா வகையான மக்களையும் எமது இதயத்திலும் நினைவிலும் நிலை நிறுத்த வேண்டிய காலம். விசேடமாக, கதியற்றவர்கள், வீடற்றவர்கள், அகதிகள், உறவுகளை பறி கொடுத்து இன்னல் படுவோர், துன்பப்படும் விதவைகள், அனாதைகள், எதற்கும் நாதியற்ற ஏழைகள் என்பவர்களை நினைவு கூர வேண்டிய காலம்.

குழந்தை யேசு இவ்வுலகத்திற்கு கொண்டு வந்த செய்தி முன் எப்பொழுதும் இல்லாதவாறு இப்பொழுது அத்தியாவசியமானதும் மிகவும் பொருத்தமானதுமாய் உள்ளது. அந்த அற்புதமான செய்தி, சமாதானம், நம்பிக்கை அன்பு என்றும் அம்சங்களை உள்ளடக்கியதாய் இருக்கிறது.

எனவே எங்களிலும் எமது நாட்டிலும் எந்தெந்த வழிகளில் சமாதானத்தை ஏற்படுத்த முடியுமோ அந்த வழிகளில் எம்மை அர்ப்பணிக்க இன்றே உறுதி பூணுவோம்.

ஒளிமயமானதும் மகிழ்ச்சி நிறைந்ததுமான ஒரு வளமான எதிர் காலம் எம்மிடையே வரும் என்றும் நம்பிக்கை கொள்வோம். சாதி, மத.இன, மொழி பேதங்களைக் கடந்து ஒவ்வொருவரையும் உண்மையாகவே அன்பு செய்யப்பழகிக் கொள்வோம்.

## அன்று நீ பிறந்தபோது அகிலமுமே மகிழ்ந்ததையா

அமலனே! அன்புருவே! அன்னைமரி பாலகனே!
அலகை செய் அழிவிலிருந்து எம்மை மீட்க
அன்று நீ பிறந்தபோது அகிலமுமே மகிழ்ந்ததையா.

இறைமகனே! யேசுபரனே! முன்னுரைத்த
இறைவாக்கினர் உரை நிறைவுபெற—அன்று
நீ பிறந்தபோது அகிலமுமே மகிழ்ந்ததையா.

ஏவை மக்கள் ஏக்கம் தீர்க்க ஏற்றபலியாகி
ஏதமில் பரம்பொருளே! ஏழையாக—அன்று
நீ பிறந்தபோது அகிலமுமே மகிழ்ந்ததையா.

ஓயாது சோராது நித்தியவழி நாம் நடக்க
ஓர் இரட்சணியக் கொம்பாகி—அன்று
நீ பிறந்த போது அகிலமுமே மகிழ்ந்ததையா.

பழைய மறை முடித்துப் புது மறை தொடங்க
பாரில் மறைபொருளாக நீ பிறந்த நாளை
இன்றுமே அகிலம் நினைத்து மகிழுதையா
என்றுமே அகிலம் நினைத்து மகிழுமையா.

மேரி றோசலீன் சூசைப்பிள்ளை
இளவாலை

## புரட்சிவீரன் பின்னால் நாமும் செல்ல..

வாழ்க்கையென்னும் பாதையிலே கார்மேகங்களும் கரும்புயற் கோலங்களும், திக்கெட்டும் சூழ்ந்தெமைத் திகைக்க வைக்கும் சூழ்நிலையில் கிறிஸ்து பிறப்பு விழா மீட்பு என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றது. இவ்வேளையில் மீட்பு என்னும் ஒளிக்கீறு எம் மத்தியில் பாய்கின்ற வேளையில் இருள் படர்ந்த காலம் இரவென கழிந்திட, தற்காலம் கொண்டுள்ள கார்கோலம் புலர் பொழுதாக படர்ந்திட, இவ் ஒளி, இளம்பரிதியின் கதிராக, அநீதி அக்கிரமங்களை அழித்தொழிக்கும் கதிராக, சுயநலம் கொடு நாவை சுட்டெரிக்கும் கதிராக திக்கெட்டும் பாய்ந்திட, உலகை மீட்க மனு உருவான மன்னனாம் யேசுபிரானின் பிறப்பு விழா சிறப்பான புதுயுகம் படைக்கும் புது விழாவாக அமையட்டும்.

கசப்பு நிறைந்த கடந்த காலங்களை மறந்து, புத்துணர்ச்சியுடனும், மனவலிமையுடனும், இறை ஆசிருடனும் புத்தம் புதிய ஆண்டை எதிர் கொள்ளும் இவ்வேளையில் எம்மிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளையும், மனவேற்றுமைகளையும் களைந்துவிட்டு எல்லோரும் ஒற்றுமையாகவும், சமத்துவமாகவும் வாழ எம்மவர்கள் கிறிஸ்துவின் அடிச்சுவட்டை பின்பற்றி வாழ்வது ஒரு முன் உதாரணமாகும். தங்களைத் தாங்களே பெரியவர்கள் என்றும், அறிஞர்கள் என்றும், வழிகாட்டிகள் என்றெல்லாம் தலைக்கனம் பிடித்தலைந்த மக்கள், தலைவர்களை கண்டு அவர்களுக்கு பணிந்து வாழ்வதையோ அல்லது அவர்களது அநீதிகளை கண்டு மௌனியாக வாய்மூடி நிற்பதையோ, கடிந்துரைத்த யேசு அநீதி நிகழ்ந்த போது சாட்டை எடுத்து சாட்சியம் பகிர்ந்த புரட்சி வீரன் கிறிஸ்துவை நாம் திருநூலிலே சந்திக்கின்றோம். தான் கொண்ட இலட்சியங்களுக்காக, தன்னுயிரையே துச்சமென மதித்த கிறிஸ்துவின் புரட்சிக் கருத்துக்களை எளிய வாழ்க்கை முறையை, கனிந்த மனப்பக்குவத்தை நாமும் பெற்று கிறிஸ்துவின் அவதாரங்களாக வாழ முன் வருவோமா?

பாழ்வெளியும் வறண்ட
நிலமும் அகமகிழும்,
பாலைநிலம் அக்களிப்பால்
பூரித்து லீலிபோல் மலரும்,
பாங்கான முளை கிளம்பித்
தளிர் கொள்ளும்,
பாவால் மகிழ்ச்சி பொங்கப்
புகழ் கூறி நடனமாடும்.
(இசையாஸ்)

திருமதி. அருள் ஞானசீலி
நெடுந்தீவு.

## வரவேற்போம் எம்பரனை !

தாழ்மையிலே, தொட்டில் கட்டித் தரித்திர மெத்தையிட்டு
ஏழ்மையிலே மலர்தூவி, எம்பரனை வரவேற்போம்.
பொறுமையிலே போர்வையிட்டுப், பிறரன்பால் தீபமேற்றி,
வறுமையினால் அரவணைத்து வரவேற்போம் எம்பரனை,
பணிவாலே பண்ணிசைத்து பாசத்தில் பூச் சூட்டி
கனிவோடு கைகொடுத்து, கர்த்தனையே வரவேற்போம்.
சகிப்பினிலே, சரந்தூக்கிச் சாந்தகுணத் தூபமிட்டு
கதியளிப்பால் தாலாட்டித் தற்பரனை வரவேற்போம்.
மன்னிப்பால் மாலையிட்டு, மாபரனாய்த் தோத்திரித்து
கன்னிமரி மைந்தனையே கரங்கூப்பி வரவேற்போம்
அங்கவீனர், அகதிகள், அனாதைகள், பிணியுற்றோர்
சிறைப்பட்டோரில்
எங்கள் பரனாரின் எழில் தோற்றம் கண்டறிந்து.
என்றென்றும் வரவேற்போம்!

ஞா. அரியமலர்

### கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின்

### நத்தார் நாடகப்போட்டி

## நாடகம் ஓர் ஊடகம்



கிறிஸ்து பிறப்பை வெறும் சரித்திர சம்பவங்களாக மட்டும் பாராமல் நாம் வாழும் சமூக சூழல் அனுபவங்களோடு இணைத்து புதிய கண்ணோட்டத்தை தூண்ட நாடகம் ஓர் ஊடகமாக வழி வகுத்ததை, நடைபெற்ற நாடகங்கள் நம்பிக்கையூட்டும் செய்திகளை தந்தன என்றார் சமூகவியல் விரிவுரையாளர் என். சண்முகலிங்கம் அவர்கள்.

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் நந்தார் நாடகப்போட்டி, மறைக்கல்வி நடுநிலையத்தில் 6-12-92 இல் நடைபெற்றபோது அதன் நடுவர்களாக என். சண்முகலிங்கம் (யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்) எஸ். அமலதாஸ் (ஆசிரிய ஆலோகசர்) எஸ். சவுந்தரம் (மறை ஆசிரியர்) கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் பிரதி இளைஞர் கழகத்தின் ''ஒளியைத்தேடி'' நாடகம் முதலாம் இடத்தையும், ஆரோக்கிய நாதர் ஆலய குழுவினரின் ''உண்மை ஒளியைத் தேடி'' இரண்டாம் இடத்தையும், புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் ''மாற்றம் வேண்டும்'' எனும் நாடகம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

பரிசில்கள் வழங்கிய யாழ். பேராலயப் பங்கு தந்தை கில்லறி ஜெபநேசன் அடிகள் 'கலைவடிவங்கள் மூலம் நல்ல, சிந்தனையூட்டும் கருத்துக்களைப் பரப்பவும், கலைஞர்களின் திறமைகளை வெளிக்காட்டவும் இன்றைய கால நெருக்கடியில் பிறரன்பு பரிமாற்றங்களுடனே மனநெருக்கடிகளைக் களையவும் பெரும் பங்களிப்பாக அமைகின்றன. இப்பணியினை செய்துவரும் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் முயற்சி பாராட்டலுக்குரியதே'' என்றார்.

யோசப் பாலா

## புனிதமான......

( 3ஆம் பக்கத் தொடர்ச்சி )

'' அண்ணை... இந்த இக்கட்டான நிலையத்திலிருந்து நாங்கள் தப்புவதற்கு ஏதாவது வழியிருக்கா'' மூத்த ஆடு பிரச்சனைக்கு வருகின்றது.

'' எந்தவழியும் இல்லை...'' பெட்டி கூறுகிறது.

'' எங்கடை முடிவு..''

'' மரணம்தான்...! ...''

'' உண்மையாகவா...'' ஆடுகள் திகைத்துப்போய் மரண பயத்துடன் கேட்கின்றன'

'' உண்மையாகத்தான் கூறுகிறேன். உங்களைக் கொன்று உங்கள் தசையைக் கறியாக்கி தனது நண்பர்களுக்கு விருந்து வைத்து நத்தார் திருநாளைக் கொண்டாடப் போகிறான்...'' பெட்டி கூறிவிட்டுப் பெருமூச்சு விடுகின்றது.

ஆடுகள் கண்கலங்கிப் போயின.

'' நீங்கள் ஒரு முழக்கயிற்றில் நின்று கட்டையைச் சுற்றிய படியால் இந்த மனித சமுதாயத்தை உங்களால் உணரமுடியாமல் போய்விட்டது... நான் தினசரி பல இடங்களைச் சுற்றிவருகிறேன். பலதரப்பட்ட மனிதர்களைப் பார்க்கிறேன்...

யேசுமகான் பிறந்த தினத்தைக் கொண்டாட இந்த மனிதன் என்னென்ன செய்கின்றான் பாருங்கள்.

... களவு செய்கிறான் ... மதுவருந்துகிறான்
... சூது விளையாடுகிறான்... ... கொலைசெய்கிறான்

புனிதமான நாட்களெல்லாம் பஞ்சமா பாதகங்கள் செய்கிறார்கள்...

உள்ளத்துக்கும் உதட்டிற்கும் இருந்த தொடர்பை நிரந்தரமாக அறுத்துவிட்டார்கள்.

மனிதன் தர்மத்தின் எல்லையைத் தாண்டி அதர்மத்தின் எல்லையில் நிற்கிறான்...

இந்த மண்ணில் இனிமேல் மகான்கள் பிறக்கமாட்டார்கள்... ஏனென்றால் மகான்களைப் பெற்றெடுக்க இந்த மண்ணில் ஒரு மனிதனில்லை!...''

பெட்டி மிகவும் வேதனையோடு கூறி முடிக்கின்றது.

# திருவழிபாட்டு நிலையத்தின் 3ஆம் ஆண்டுவிழா

யாழ் மறைவட்டத் திருவழிபாட்டு நிலையத்தின் 3 ஆம் ஆண்டு விழா கடந்த 04-12-92 அன்று நடைபெற்றது. யாழ் ஆயர் தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ''திருவழிபாடு மக்களை இறைவனுடன் ஒன்று படுத்தும் பொதுச் செபமாயிருந்தாலும், ஒவ்வொருவனும் இறைவனோடு ஆழ்ந்து உறவாட இட்டுச் செல்லும் தனிச் செபத்தின் அத்திவாரமாகவும் அமைய வேண்டும்'' எனக் கூறினார்.

இவ் விழாவில் நடுநிலையத்தின் இயக்குனர் ஜே. நிக்கலாஸ் அடிகளார் நடப்பாண்டில் பல துறைகளில் இந்நிலையம் ஆற்றிய சிறப்பான செயல் அறிக்கையைச் சமர்ப்பித்து யாவரின் பாராட்டையும் பெற்றார். மறைவட்ட வழிபாட்டு கலை கலாசார ஆணைக் குழுவின் தலைவர் G. மேரியோசவ் அடிகளார் திருவழிபாட்டின் உன்னத தன்மையை 2ஆம் வத்திக்கான் சங்க ஏடுகளின் வழியாய் விளக்கினார். அவரைத் தொடர்ந்து அன்றைய சிறப்பு நிகழ்வாக, திருவழிபாட்டு நிலையம் இசை வல்லுனன் திரு. யேசுதாஸ், திருமறைக்கலாமன்றத்தின் உதவியுடன், தயாரித்த பஜனைப் பாடல்களைக் கொண்ட ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு மதிப்பீட்டுரையை மறைவட்ட குருமுதல்வர் அருட் திரு எஸ். ஜே. இம்மனுவல் அடிகளார் நிகழ்த்தினார். ''மனித உள்ளத்தின் பண்பாட்டுச் சக்தியின் நரம்புகளை அசைக்கும் பொழுது அது இசையாகி செபமாக மாறுகிறது. மேலும் திருவழிபாடு சிந்தனைக்கும், இறையியலுக்கும், வாழ்விற்கும் மாத்திரமல்ல, இறை அனுபவத்தின் வளர்ச்சிக்கும் ஊற்றாயிருக்க வேண்டும்'' எனக் கூறினார்.

பல பங்குகளிலிருந்தும் இந்நிலையத்தில் விசேட பயிற்சி பெற்றவர்கள் தங்கள் அர்ப்பணவாழ்வில் வாக்குறுதியை ஆயர் முன் தெரிவித்து ஆண்டகையிடமிருந்து சிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

# இயேசுவின் தலைமுறை....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலர்'' (காண்க இசை. 11 : 1, 10) ''ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட வழித்தோன்றல்'' (காண்க கலா. 3 : 16) என்று காட்ட முற்படுகின்றார்.

இதே வேளையில் யூதரல்லாத புறவினத்தாருக்கு தனது நற்செய்தியை எழுதிய புனித லூக்காஸ் தனது இயேசுவின் தலைமுறைப் பட்டியலை இயேசு யூத இனத்தின் மீட்பர் மட்டுமல்லாது முழு மனித இனத்தினதும் மீட்பர் என்பதை வலியுறுத்தும் பாணியில் பரந்துபட்டதாகவும் நீளமானதாகவும் எழுதியுள்ளார்.

**நான்கு பெண்கள் :-**

புனித மத்தேயுவின் தலைமுறைப் பட்டியலில் உள்ள சிறப்பான அம்சங்களில் ஒன்று நான்கு பெண்களின் பெயர்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகும் (காண்க: மத். 1 : 3, 5, 6). அவையாவன. தாமார் (3), இராகாய் (5), ரூத் (5), உரியாவின் மனைவி (6). இவர்களின் பெயர்கள் தலைமுறைப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது பற்றி பல விதமான கருத்துக்கள் நிலவுகின்றன.

★ இவர்கள் அனைவரும் பாவிகளாக வாழ்ந்தவர்கள் பாவிகளை பாவத்திலிருந்து மீட்க இயேசு அவர்களின் வரிசையில் வந்து பிறந்தார் என்பதைக் காட்ட இவை சேர்க்கப்பட்டன.

★ இவர்கள் அனைவரும் புறவினத்தைச் சேர்ந்தவர்கள். தாமார், இராகாப் என்பவர்கள் கனானியப் பெண்கள் (ஆதி. 38 : 2, யேசுவா 2:11). ரூத் மோவாபிய பெண். (ரூத். 1:4) பெத்சாபே என்னும் உரியாசின் மனைவி, ஏத்தைய பெண் (காண்க 2 சாமு 11:3) இந்தப் பெண்களை தலைமுறைப்பட்டியலில் சேர்த்துக் கொண்டதனால் புறவினத்தாருக்கும் இயேசு மீட்பைக் கொண்டு வந்தார் என்பது முன்கூட்டியே படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

★ இந்தப்பெண்கள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் ஒழுங்கீனமான நடத்தையையுடையவர்களாக கருதப்பட்டவர்கள். யூதர்களின் வரலாற்றில் நன்கு அறியப்பட்டிருந்த இந்த ஒழுங்கீனமான பெண்களை தமது தலைமுறைப்பட்டியலில் சேர்த்ததன் மூலம், கடவுள் தனது மீட்பின் திட்டத்தில் எத்தகைய ஒழுங்கீனமானவர்களையும் பயன்படுத்தும் ஆற்றல் வாய்ந்தவர் என்பதை புனித. மத்தேயு படம்பிடித்துக் காட்டுகின்றார்.

**எண் பதினான்கும் அதன் முக்கியத்துவமும்**

புனித மத்தேயுவின் தலைமுறைப்பட்டியலில் பதிநான்கு பெயர்கள் கொண்ட மூன்று பட்டியல்கள் கொடுக்கப்படுகின்றன. இந்த எண் ஏன் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டது என்பதைப்பற்றி பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன:

★ யூத மக்களைப் பொறுத்தவரை தாவீது அரசர் அவர்களின் வரலாற்றில் மிக முக்கியமான மனிதர். அவர்களின் எண்சோதிடத்தின்படி தாவீது மன்னருடைய பெயரின் கூட்டெண் பதினான்கு. எனவே இந்த எண் பதின்நான்கு என்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக யூத – கிறிஸ்தவர்களுக்கு தனது நற்செய்தியை எழுதிய புனித மத்தேயு இந்த எண்ணை தலைமுறைப்பட்டியலில் பயன்படுத்தியிருக்கலாம்.

★ ஆபிரகாம், ஈசாக்கு உள்ளடங்கலாக பிதாப்பிதாக்களின் எண்ணிக்கை பதின்நான்கு (காண்க 1 நாளா 2 : 1 - 4; ரூத் 4 : 18 - 22). இந்த எண்ணிக்கையை பேணுவதற்காக புனித. மத்தேயு எண் பதின்நான்கு என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கலாம்.

★ வேதாகம பாரம்பரியத்தில் எண் ஏழு ஒரு நிறைவான எண். இதன் பெருக்கமான பதின்நான்கை பயன் படுத்துவதன் மூலம் புனித மத்தேயு கடவுளின் மீட்பின் திட்டம் நிறைவை நோக்கிச் செல்கிறது என்பதைக் காட்ட எண்ணியிருக்கலாம்.

இந்த தலைமுறைப் பட்டியலில் இயேசுகிறிஸ்து தாவீதின் மகனாகவும் ஆபிரகாமின் மகனாகவும் காட்டப் படுகின்றார் (காண் மத் 1 : 1) ஆபிரகாமுக்கும் தாவீதுக்கும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இயேசுவில் நிறைவேறுவதாகக் காட்டுவதே புனித மத்தேயுவின் நோக்கம்; இதற்காக புனித சூசையப்பர் அரசபரம்பரையில் வருவதாக காட்டப் படுகின்றார். புனித சூசையப்பர் இயேசுவினுடைய இயல்பான தந்தையல்ல எனவே இயேசு புனித சூசையப்பரின் இரத்த உறவு முறையைப் பெறமுடியாது. இருந்த போதிலும் ''இயேசுதாவீதின் மகன்'' என்னும் கருத்து புனித மத்தேயுவின் நற்செய்தி முழுதும் இழையோடிக் கிடக்கின்றது. இவர் தனது தலைமுறைப் பட்டியலில் இயேசுவே மீட்பர் என்றும் விசுவாச வெளிப்பாட்டை வலியுறுத்துகின்றார். இயேசு வாக்களிக்கப்பட்ட மெசியா என்றால் அவர் தாவீதின் வழிவந்தவர் என்பதையும் மறுக்கமுடியாது. மொத்தத்தில் இந்த தலைமுறைப் பட்டியல் எம்மையெல்லாம் ஒரு பெரிய விசுவாச உண்மையை நோக்கி அழைத்துச் செல்கிறது.

க. அருள்நேசன்
(புனித சவேரியார் குருமடம்)



# காவலன் கண்மணிகள்

| ஒளி: 6<br>சுடர்: 20 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

## மாற வேண்டும்

இன்னும் பத்துத் தினங்களில் கிறிஸ்மஸ். மரியசீலியின் அப்பாவும், அம்மாவும் கிறிஸ்மஸ் வரவுசெலவு பார்த்துத் திண்டாடிப்போயினர்.

அவர்களின் நிலையை நன்குணர்ந்த மரிய சீலி அமைதியாக இருந்தாள். அவளின் அண்ணன் தவசுதன் தன் தேவைகள் விடுபட்டுப்போகுமோ என அங்கலாய்த்தான்.

அப்பா மரியசீலியைப் பார்த்தபொழுது அவள் புன்னகைத்தாள்.

''ஏன் அம்மா சிரிக்கிறாய்?'' என அப்பா கேட்டார்.

மரியசீலி அப்பாவின் படிப்றைக்குள் சென்று ஒரு புத்தகத்துடன் வந்தாள்.

''அப்பா, வாசிக்கட்டுமா?'' என்றாள், சம்மதம் கிடைத்தது.

''அவர் செல்வம் மிக்கவராய் இருந்தும் அவருடைய ஏழ்மையால் நீங்கள் செல்வராகும்படி உங்களுக்காக ஏழையானார். எனவே நாம் வாழும் முறையும், வகையும் மாற வேண்டும். பிறர் துன்பம் புரிந்து, மனமாற்றம் பெற்று கிறிஸ்துவின் பாதையில் ஏழ்மை, எளிமையுடன் வாழ வேண்டும்,'' என கணீர் என வாசித்தாள். அவ்வேளை ''அம்மா பசிக்குது நாங்கள் அகதிகள்'' என வாசலில் பல குரல்கள் ஒலித்தன.

மரியசீலி தான் சேர்த்திருந்த பணத்தை எடுத்துவர அறைக்குள் சென்றாள். ●

*கண்மணிகளுக்கு மாமாவின் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்!*

அன்பு விழி

# பங்குக் குருவை மையமாகக்கொண்டு மறைக்கல்வி புகட்டப்படவேண்டும்

● **குருமுதல்வர் S. J. இம்மானுவல் அடிகளார்**

யாழ் மறைக்கல்வி நிலையத்தில் டிசெம்பர் 5ஆம் திகதி மறைக்கல்வி இயக்குனர் R. H. சகாயநாயகம் அடிகளாரின் தலைமையில் ஆண்டு இறுதி நிகழ்ச்சிகளும், மறைக்கல்வித் தேர்வு, வேதாகமப் போட்டிக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கும் வைபவமும் ஒளிவிழாவும் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக யாழ். ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொண்டார். மறைக்கல்வி பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் மாத்திரமல்ல, சிறப்பாக இல்லங்களில் மறைக்கல்வி புகட்டும் பெற்றோரினது பாரிய பொறுப்பை ஆயர் அவர்கள் நினைவுபடுத்தினார்.

ஆசியுரை ஆற்றிய மறைவட்டக் குருமுதல்வர் அருட் திரு. S. J. இம்மானுவல் அடிகளார், பிரதம போதகரும் ஆசிரியருமான ஆயரைப் பிரதிபலிக்கும் பங்குக் குருவானவரை மையமாகக் கொண்டு, பங்கிலுள்ள துறவியரும், பொதுநிலையினரும் அவரோடு இணைக்கப்பட்டு மறைக்கல்வி கற்பிக்கும் பணியில் ஈடுபடவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். போதனைக்கும் செயலுக்கும், இன்னும் திருச்சபைக்கும் உலகிற்கும் உள்ள இரு இடைவெளிகளைக் குறைப்பதில் மறைஆசிரியர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் மேலும் கூறினார்.

கத்தோலிக்க ஆசிரியத் தலைவர் சூசைப்பிள்ளை, மறை ஆசிரியத் தலைவி மா. விக்ரோறியா அவர்களும்உரையாற்றினர். இறுதியில் எட்டுப் பங்குகளிடையில் நாடகப் போட்டி நடைபெற்று, விழா இனிதே நிறைவெய்தியது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பண்டிதர்

**திரு. மு. க. க. அருட்பிரகாசம்**
(இளைப்பாறிய அதிபர்)

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 04-12-1914 | 15-11-1992 |

அழிவுக்குரிய இவ்வுடல்
அழியாமையையும்
சாவுக்குரிய இவ்வுடல்
சாகாமையையும்
அணிந்து கொள்ளும்
போது எழுதியுள்ள
இவ்வாக்கு நிறைவேறும்

'சாவு வீழ்ந்தது வெற்றிகிடைத்தது,
சாவே உன் வெற்றி எங்கே,
சாவே உன் கொடுக்கு எங்கே?
(இசை. 25:8 ; ஒசே :13 14)

அன்னாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காகப் பிரார்த்திப்போம்.

**மனைவி, மக்கள், சகோதரர், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

எமிலகம், வளன்புரம்
கொழும்புத்துறை.

A/51/92.

### பேரருள்திரு கெனத் யேம்ஸ் பேர்னான்டோ ஆண்டகை

# அங்கிலிக்கன் சபை ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்

அங்கிலிக்கன் திருச்சபையிற் கொழும்பு ஆயராக பேரருட்திரு கெனத்யேம்ஸ் பேர்னான்டோ ஆண்டகை அவர்கள் கிறிஸ்து இரட்சகர் ஆலயத்தில் அங்கிலிக்கன் திருச்சபை முதல்வர் கன்ரபிறி பேராயர் மேன்மைதங்கிய ஜோர்ஜ் லெனாட் கேறி ஆண்டகை அவர்களால் டிசம்பர் 6 ஆம் திகதி திருநிலைப் படுத்தப்பட்டார். பல்வேறு கிறிஸ்தவ சபைகளின் தலைவர்களாகிய மற்றும் எட்டு ஆயர்கள் இத்திருச்சடங்கில் இணைந்திருந்தனர்.

திருநிலைப்படுத்தப்பட்ட புதிய ஆயர், தன் அதிகாரச் சின்னங்களாகிய திரு முடி, செங்கோல், மேலாடைகளைக் களைந்து விட்டு வயோதிப ஆண், பெண் இருவர், திருநிலையினர் ஒருவர், ஒரு குழந்தை முதலியோரின் பாதங்களைக் கழுவினது இத்திருச்சடங்கின் சிறப்பு அம்சமாகவிருந்ததுடன் ஆயரின் பணியின் முன் குறியாகவும் கிறிஸ்து சீடத்துவத்தின் எடுத்துக் காட்டாகவும் விளங்கியது.

புதிய ஆயர் ஆற்றிய மறையுரையில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களைத் தரிசிக்க விருப்பம் தெரிவித்ததுடன், மக்களுக்கு அன்பும் பரிவும் காட்டுவதே தன் முதல் அக்கறையாயிருக்குமென்றார். நீதிக்கும் எல்லா மக்கள் மத்தியில் சமாதானம் நிலவவும் உழைப்பதற்கு வேண்டிய வலிமையை இறைவன் தனக்கு அளிக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்தார்.

## புனித சவேரியார் உயர் குருமடம்

★ றோம் "ஊர்பான்" பல்கலைக் கழகத்துடன் இணைப்பு

★ தமிழர்களின் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கும் தலைவர்களை உருவாக்கும் நிலையம்

புனித சவேரியார் உயர் குருமட பாதுகாவலரின் திருநாள் 3.12.92 அன்று, குருமட அதிபரும் மறைவட்ட குரு முதல்வருமான அருள் திரு S. J. இம்மானுவேல் அடிகளார், புதிய யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை வரவேற்று உரையாற்றுகையில்: தற்போது யாழ் மறைவட்டத்தின் ஆயரென்ற முறையில், இம் மறைவட்டத்துக்கு மாத்திரமல்லாது தமிழ் ஈழத்தின் தலத் திருச்சபைகள் அனைத்திற்கும் உயிராதாரமான ஓர் நிறுவனத்தை புதிய ஆயர் அவர்கள் பொறுப்பேற்கின்றார் எனக் கூறினார். ஓய்வு பெற்ற ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை, இக்குருமடத்தை நிறுவியதிலும், அர்த்தமுள்ள ஒரு பாதுகாவலரைத் தெரிந்ததிலும், அதன் ஆரம்பகால வளர்ச்சியை மிகுந்த கவனத்துடன் பேணி வந்ததிலும் விவேகத்துடனும் தூரநோக்குடனும் செயற்பட்டுள்ளாரெனவும் மேலும் கூறினார்.

மக்கள் நற்செய்திப்பணிக்கான பேராயமும், கத்தோலிக்க கல்விக்கான பேராயமும் இக்குருமட கல்வித்துறைகளை ஊர்பான் பல்கலைக் கழகத்துடன் இணைக்க சம்மதித்துள்ளன என்றும் அதிபர் குறிப்பிட்டார்.

அதிபர் அடிகளார் மேலும் கூறியதாவது:

''நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வரும் தமிழரின் நிலைமை காரணமாக நாம் எமது திருச்சபையை இன்னும் உயிர்த்துடிப்புள்ளதாகவும், பணிநோக்குடையதாகவும் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனால் வருங்காலத்திற்குத் தகுந்த குருக்களையும் மறைத்தலைவர்களையும் உருவாக்குகின்ற செயல் திறமுடைய ஒரு நிலையமாக இந்தக் குருமடம் வளர்ச்சியடைய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் எதிர்காலமும், தமிழ் மக்கள் மத்தியில் உள்ள திருச்சபைகளின் எதிர்காலமும் சவால்கள் நிறைந்ததாயுள்ளது. இயேசுக்கிறிஸ்துவை இன்னும் ஆழமாகப் பின்பற்றுவதற்கும், அவர் பெயரால் மக்களுக்கு துணிவுடன் சேவை புரிவதற்கும் இந்தச் சவால்கள் உண்மையான சந்தர்ப்பங்களாக விளங்குகின்றன. அதாவது ஆற்றல் வாய்ந்த தங்கள் தலைமையின் கீழ், எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு நாம் அனைவரும் விழிப்புள்ள, செபிக்கின்ற, ஊக்கமுள்ள ஆட்களாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது.''

## திருமலை-மட்டுநகர் மறைவட்ட ஆயரின் திருவருகைக்கால சுற்றுமடல்



எதிர்வரும் 1993 ஆம் ஆண்டில் ''திருகோணமலை மேற்றிராசனம்'' எனப் பிரகடனப் படுத்தப்பட்ட நூறாவது ஆண்டின் நிறைவை தகுந்த முறையிலும் பயனளிக்கக்கூடிய விதத்திலும் நன்றியுணர்வுடன் கொண்டாட வேண்டுமென திருமலை – மட்டுநகர் ஆயர், பேரருட்திரு. யோசவ் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் எழுதிய திருவருகைக் கால சுற்றுமடலில் தம் தலத்திருச்சபையின் சகல அங்கத்தவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இச் சுற்றுமடலின் முக்கிய பாகங்களை இங்கு தருகின்றோம்.

அன்புச் சகோதரர்களே!

**ஆராய்ந்து செயல்படுதல் :**

எமது மறைவட்டத் திருச்சபையை உற்றுநோக்கும்போது இன்றைய காலகட்டத்தில் அதற்கு உள்ளும் புறமும் இருந்து எழும் பல சவால்களுக்கும் பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதன் மத்தியிலும் நாம் எமது திருச்சபையைப் புதுப்பித்து கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஏற்றவாறு நாமும் வாழ்ந்து, அந் நற்செய்தியை பிறர் மத்தியிலும் பரப்பத் தகுந்த வழிகளை பரிசுத்த ஆவியின் துணையோடு ஆராய்ந்து செயல்படுவது எமக்கு இறைவன் தந்த கடமையாகும். இதற்கு நாம் பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டலையும் அருள் உதவியையும் நாடி நிற்பது அவசியம்.

இந்த ஆண்டில் கிறிஸ்தவ விசுவாசிகள் என நம்மைக் கருதினாலும் எம் விசுவாசத்தை புதுப்பித்தல் நமக்கு அவசியம். இதன் விளைவாக நாம் கிறிஸ்துவின் நற்செய்தியின் கருவிகளாக மாறி மறைபரப்புவதிலும், அதை வளர்ப்பதிலும் கூடிய ஈடுபாடுகொள்ளவேண்டும். மற்றவர்களில் கிறிஸ்துவை உருவாக்குவது கிறிஸ்து எம்மிடம் ஒப்படைத்த திருப்பணி. இதுவே நாம் பரிசுத்தர்கள் ஆவதற்கு உகந்த முறையாகவும் அமையும்.

**இன்றைய நிலை :**

எமது தலத்திருச்சபையை உற்றுநோக்கும்போது, ஒரு தேங்கிய நிலையை நாம் அங்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அருள் கொழிக்கும் திருவருட்சாதனங்களில் பங்கு கொண்டு தம் விசுவாச வாழ்வில் வளராமல் பலர் உள்ளனர்; ஏனோதானோவென தம் விசுவாச வாழ்வில் அக்கறை சற்றுமே இல்லாத சிலர்; விசுவாசத்தைவிட்டு முற்றாகவே விலகி வாழும் சிலர்; மேலும் திருச்சபையைத் துறந்துவிட்டு பிற சபைகளுக்குச் செல்லும் சிலர். மறுபுறத்தில், எம்மைச் சுற்றிலும் கிறிஸ்துவை அறவே அறியாத பெருந்தொகை மக்களையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். இதைவிட, எம் சமூகம் பலவித அச்சுறுத்தல்கள், இன்னல்கள், பூசல்களுக்கு மத்தியில் வாழத் தத்தளித்துக்கொண்டிருக்கிறது.

**எம் பணி**

ஆகவேதான் உங்கள் வாழ்க்கை வளம்மிக்கதாக இருக்க அடிக்கடி நீங்கள் திருவருட்சாதனங்களை அணுகி வாழ வேண்டுமென நாம் உங்களை அழைக்கின்றோம்;

மேலும் அயலவர்மேல் நாம் கொண்டுள்ள அக்கறை, சிறப்பாக இக்கட்டான இக்கால கட்டத்தில் இன்னும் அதிகரிக்க வேண்டும். எம் பங்குத் தளங்கள் இறைமயமான ஒரு சமூகமாகமாறி ''உலகிலே இறைப்பிரசன்னத்தின்'' (மீ. ப. 49) அடையாளங்களாகத் திகழவேண்டும். சுருங்கக் கூறின் திருமுழுக்குப் பெற்ற நாம் ஒவ்வொருவருமே நற்செய்தியை எடுத்துரைக்கும் பணியில் தனியாகவும், கூட்டாகவும் பொறுப்புள்ளவர்களாய் இருக்கவேண்டும், நம் பாடசாலைகள், ஏனைய தொழிலகங்கள் ஸ்தாபனங்கள் அனைத்துமே நற்செய்தி பரப்பும் தளங்களாக அமைய வேண்டும்.

முக்கியமாக இந்த ஆண்டில் நாம் ஒவ்வொருவரும் நம்மை விட்டுப் பிரிந்து சென்ற சகோதர சகோதரி ஒருவரையோ; அன்றி கிறிஸ்துவை அறியாத ஒருவரையோ கிறிஸ்துவிடம் அழைத்து வருவோம் என உறுதி பூணுவோம்.

இந்த நூற்றாண்டாகிய 1993ஆம் ஆண்டை மனமாற்றத்திற்கும், மறைபரப்புப் பணிக்கும் உரிய ஆண்டாக நாம் இத்தால் பிரகடனம் செய்கின்றோம்.

## அருட்திரு Z. N. குரூஸ் அ. ம. தி. காலமானார்



நாடு போற்றும் நற் பிரசங்கியார் ஆகவும், ஏடுபோற்றும் உன்னத, உத்தம குருவாகவும் கடந்த 54 ஆண்டுகளாக அரும் பெரும் பணியாற்றியவரும், பேசாலையின் பெரு மகனும், முதற் கனியுமான அருள் திரு. சக்கரியாஸ் நீக்கலஸ் குரூஸ், அமதி. அடிகளார், டிசெம்பர் 7ஆம் நாள் யாழ் அமல உற்பவத்தில் காலமானார் என்பதைஆழ்ந்த கவலையுடன் தெரிவிக்கின்றோம்.

செப்டெம்பர் மாதம் 9 ஆந் திகதி 1912 ஆம் ஆண்டு பிறந்த இவர், அமல மரித் தியாகிகளின் குருவாக ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி, 1938 ஆம் ஆண்டு, திருநிலைப் படுத்தப்பட்டார். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் ஞான வழிகாட்டலில் உதவிக் குருவாக ஒரு வருடம் பணியாற்றியபின் இவர் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையின் போஷகராக 5 வருடங்கள் சேவை செய்தார். அதைத் தொடர்ந்து 1945-1948 ஆண்டுகளில் வவுனியாப் பங்கிலே திருத்தொண்டாற்றினார். 1948 தொடக்கம் 1962 வரை, வென்னப்புவ ''நசரேத்'' எனும் அமலமரித்தியாகிகளின் தியான இல்லத்தின் ஆரம்ப ஸ்தாபகர்களில் ஒருவராக விளங்கிய இவர், சபையின் முன்னணி முதுநிலை நிர்வாக ஆலோசகராகவும், துணை மாகாண முதல்வராகவும், பின்னர் வட மாகாண முதல்வராகவும், (Vicar Provincial) சிறப்பான சேவை புரிந்துள்ளார்.

வயோதிப குருக்களைப் பேணிப் பராமரிக்க கொழும்புத்துறையில் ஓர் இல்லத்தை ஆரம்பித்த பெருமையும் இவரைச் சார்ந்தது. அருள் தந்தை அவர்களின் குருத்துவ வாழ்வு, அவரது போதகப் பணியால் சிறப்புற்று விளங்கியது. நம் நாட்டில், பற்பல மறைப் பங்குகளுக்கும் போதகராகப் பணி செய்யச் சென்று, இறைவாக்கினை இனிமையுற எடுத்தியம்பி, அனைவரதும் உள்ளங்களையும் கொள்ளை கொண்டு, இறைமக்களை உயிருள்ள விசுவாசத்தில் உன்னத கிறீஸ்தவர்களாக உயர்த்தி வைத்த பெருமை அன்னாருக்கே உண்டு. மடுப்பதியிலே ஆற்றிய போதகங்களும் வேண்டுதல்களும் நாடறிந்த நாமறிந்த பேருண்மையாகும்.

இத்தகைய அரும்பணி ஆற்றி, தமது ஓட்டத்தை முடித்த இவருக்கு நீதியின் கிறீடத்தை இறைவன் தமது பரிசாக அளித்திட அனைவரும் வேண்டுவோமாக!

**1993ஆம் ஆண்டு பூர்வீக குடிமக்கள் ஆண்டாக ஐ. நா. வினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.**

கிறிஸ்மஸ், புத்தாண்டு லீடுமுறை காரணமாக அடுத்த இதழ் 15-01-1993 இல் வெளியாகும்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல. QB/1001/58/81